SOUTH INDIAN MUSIC

THE KRITIS OF SREE TYAGARAJA

SAINT AND SINGER.

216
168
19

...ted and Edited by C. R. SREENIVASA AYYANGAR, B.A.

2-3597

விஷய அட்டவணை.

நெ.	கீர்த்தனங்களின் பெயர்.	ராகம்.	தாளம்.	பக்கம்.
37	கலிகியுண்டே	கீரவாணி	ஆதி	167
38	எந்த முத்தோ	பிந்துமாலினி	ஆதி	170
39	கடதேர ராதா	தோடி	தேசாதி	173
40	எந்நவேடு கொந்து	ஸரஸ்வதீமனோஹரி	தேசாதி	176
41	நெனருஞ்சினானு	மாளவி	ஆதி	179
42	ஸொகஸுகா	ஸ்ரீரஞ்ஜனி	ரூபகம்	182
43	ஸ்ரீமானினீமனோஹர	பூர்ணஷட்ஜம்	தேசாதி	186
44	அநாதுடனுகானு	ஜிங்கலா	ஆதி	19!
45	பஜனசேயவே மனஸா	கல்யாணி	ரூபகம்	193
46	ஸ்வரராக	சங்கராபரணம்	ஆதி	199
47	ஸ்ரீகாந்த	பவப்ரியா	தேசாதி	207
48	பவநுத	மோஹனம்.	ஆதி	211

9 MAR 1912 MADRAS

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அவருடைய சிஷ்யர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். கேவலம் ஸங்கீதத்தை
அப்யஸித்து அதனால் ஜீவனம் செய்யவேண்டுமென்று வந்த சிஷ்யர்களேயல்லாது, ஸாதன சதுஷ்டய ஸம்பன்னர்களாய்த் தீப்
பற்றி எரியும் வீட்டிலிருந்து தப்பி ஓடுகிறவனைப் போலவும், தன் தலை மயிரில் நெருப்புப்பிடித்தவன் ஜலம் எங்கே எங்கேயென்று
கதறிக்கொண்டு ஓடுவதுபோலவும், ஸம்ஸாரதாபத்ரயமென்ற அக்னியால் வெந்து தபித்து, ஸத்குருக்ருபாகடாக்ஷமென்ற
தடாகத்தில் முழுகி, ஜனனமரண ரூபமான தாபத்தைப் போக்கி, ப்ரஹ்மானந்தத்தை அனுபவிக்க விரும்பி, முமுக்ஷுத்வமென்ற
மோக்ஷேச்சையைப் பூர்ணமாய் அடைந்த உத்தம சிஷ்யர்களல்லவே. ஆகையால் அவர்கள் ஒருவர்க்கொருவர் "நமது குரு
ஸ்வாமிகள் மற்ற விஷயங்களில் ஸர்வக்ஞராயிருந்தும் லௌகிக விஷயத்தில் கேவலம் குழந்தை. லோகத்தில் ஒவ்வொருவனும்
இரவுபகலாய்க் கஷ்டப்படுவதும் உழைப்பதும் தன் தேஹத்தையும் மானத்தையும் பிறர்க்கு அடிமைப்படுத்துவதும், வெயில்
பனி காற்று மழை முதலியவைகளை லக்ஷியஞ் செய்யாமலிருப்பதும், தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் மற்றொருவனை ஸ்தோ
த்ரஞ் செய்வதும் எதற்காக? இதிருக்கட்டும்; தேவதைகளை உபாஸிப்பதும், ஈச்வரனைப் பஜிப்பதும் எதற்காக?
கேவலம் மோக்ஷத்திற்கல்லவே. மோக்ஷமென்பது இவ்வுலகம் விட்டகன்ற பிறகல்லவோ? இவ்வுலக ஸுகங்களைப் பூர்ணமாய்
அனுபவித்து அவைகளில் நிரந்தரமான வைராக்யம் பிறந்தாலல்லவா அதைக்காட்டிலும் மேலானதும் இதின் தோஷங்களில்
லாததுமான ஸுகமும் பதவியும் இருக்கிறதா வென்று விசாரிக்கவும் தேடவும், அடையவும் விருப்ப முண்டாகும்? ப்ரவிருத்தி,
நிவிருத்தி யென்ற மார்க்கங்களில் முதலாவது எது? தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷ மென்ற நான்கு புருஷார்த்தங்களில் நடு
நாயகமாய் விளங்குவது அர்த்தமும் காமமுமல்லவா? மோக்ஷமென்பது மற்ற மூன்றையுமடைந்த பிறகன்றோ கிடைக்கும்? இப்
பொழுது நமது குருஸ்வாமிகள் தன் காலக்ஷேபத்திற்கும் ராமனுடைய கைங்கர்யத்திற்கும் தன்னை வந்தடைந்த சிஷ்ய கணங்
களுக்கும் அதிதிகளுக்கும் குறைவில்லாமல் போதுமான வரையில் செலவு செய்வதற்குப் பிறரை எதிர்பார்க்க வேண்டியிருக்
கிறதல்லவா? அதைத் தவிர்த்து, தனத்தை ஸம்பாதிப்பதிலுள்ள எண்ணிறந்த கஷ்டங்களை மேற்கொள்வதேன்? இஹபர
மென்பதில், முதலாவதான இஹத்தைக் கவனிக்காமல் பரத்தையே நாடுகிறவன் நுனிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு அடிக்
கிளையை வெட்டுகிறவனைப் போன்றவன். 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' யென்று நாயனார் சொன்னதும் பொய்யோ?
ஒவ்வொரு நிமிஷமும் தேஹமும் மனஸும் கஷ்டத்தால் வாடியிருக்கும்பொழுது இந்த்ரியங்களை அடக்கி, மனஸை ஒரே
நிலையில் நிறுத்தி, ஆனந்தத்துடன் ஈச்வரனைப் பஜனைசெய்வதெப்படி? நமது ஸ்திதியோ அதைக்காட்டிலும் பரிதபிக்கத்தக்
கது. லோகத்தில் ஸௌக்யமாய்ப் பிழைப்பதற்கு வழியிருந்தால் நாம் இங்கே வருவோமா? வேறொரு கதியுமில்லாமல் இந்தப்
பாட்டையாவது கற்று, விசார மின்றி, வீடுவாசல் பெண்டுபிள்ளைகளுடன் இவ்வுலகத்தில் சிறிதுகாலம் பிழைத்திருக்க எண்
ணினோம். இப்பொழுது நமது குருவிற்கும் நமக்கும் வெகுநாள் தரித்ரம் நீங்கும் நல்ல ஸமயம் வந்திருந்தும், நமது பாபகர்மம்
குறுக்கிட்டு அதை அடைய வொட்டாமல் தடுக்கிறதே. நமது மஹாராஜா விடத்தில் த்ரவ்யம் முதலிய ஸன்மானங்களை வாங்கு
வதில் பிசகென்ன? இந்தத் தேசம் யாருடையது? நாம் இருக்கும் வீடும், அனுபவிக்கும் ஸகல ஸ்வதந்த்ரங்களும் ஸௌக்யங்

களும் யாரால் கொடுக்கப்பட்டன? ஸகல கௌரதையும் ஸன்மானமும் மர்யாதையும அரசனிடத்திலிருந்து ப்ரஜைகள் பெற்றுக்கொள்ள வேண்டியது ந்யாயமல்லவா? சாஸ்த்ர ஸம்மதமல்லவா? அரசன் ப்ரஜைகளுக்குப் பிதாவைப் போன்றவன்.

"ப்ரஜாநாம் விநயாதாநாத் ரக்ஷணாத் பரணாதபி
ஸ பிதா பிதரஸ்தாஸாம் கேவலம் ஜன்மஹேதவ:

ப்ரஜைகள் ஸன்மார்க்கத்தில் நடக்கும்படி செய்வதாலும், பயத்திற்குக் காரணமான விஷயங்களிலிருந்து ரக்ஷிப்பதாலும், அன்னபானாதிகளால் போஷிப்பதாலும் அரசன் அவர்களுக்குப் பிதாவாகிறான். பிதாக்களென்று லோகத்தில் சொல்லுகிறவர்கள் அவர்களைப் பிறப்பித்தது மாத்ரமேயன்றி வேறு உபகாரத்தைச் செய்தவர்களல்ல" வென்று காளிதாஸ மஹாகவி (ரகுவம்சம் I. 24) சொல்லியிருக்கிறானன்றோ. பிதாவிடத்திலிருந்து புத்ரர்கள் ஸௌக்யங்களைப் பெறுவது தர்மம்; பெறுமவிருப்பதும், வலுவில் கொடுக்கும்போது மறுப்பதும் அதர்மம். மேலும், அரசன் கேவலம் ஈச்வராம்சமன்றோ? ப்ரத்யக்ஷமான தைவமன்றோ?

"நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:—விஷ்ணுவின் அம்சத்தைப் பெறுவிட்டால் ஒருவன் அரசனாக முடியாது" என்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ப்ரத்யக்ஷமில்லாத ஈச்வரனை வெகுச்ரமப்பட்டு உபாஸித்து அவரிடத்திலிருந்து போகபோக்யங்களைப் பெற விரும்புவதும் முயலுவதும் தர்மமென்று வாதிப்பவர்கள், ப்ரத்யக்ஷதைவமான அரசன் அவைகளையே வலுவில் கொடுக்கும்பொழுது அதைப் பெறுவது அதர்மமென்று வாதிப்பது வெகு ஆச்சர்யம். ஆயினும், இதற்கு நாம் செய்யும் பரிஹாரம் யாதுமில்லை" யென்று அடிக்கடி கூட்டங் கூடி ரஹஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருப்பதை ஸ்வாமிகள் அறிந்தும், அறியாதவரைப்போல் கொஞ்சகாலமிருந்தார். பிறகு, அவர்களுக்குள்ள ஸம்சயத்தையும் விபரீதமான எண்ணங்களையும் நிவர்த்திக்க வேண்டுமென்று நினைத்து ஒரு ஏகாதசீ தினத்தில், தானும் தன் சிஷ்யர்களும் அத்புதமான கானங்களால் பகவானை ஆராதித்துக், கேட்பவர்கள் ஆனந்தத்தால் பரவசமடையச் செய்து, எல்லோருடைய மனஸும் ராம மூர்த்தியின் திவ்ய மங்கள விக்ரஹத்திலும் அனந்த கல்யாண குணங்களிலும் லயித்து ஈடுபட்டிருக்கும் ஸமயத்தில், தன் கீர்த்தன ரத்னங்களில் ஒன்றாகிய "நிதி ஸால ஸுகமா? ராமுனி ஸன்னிதி ஸால ஸுகமா? நிஜமுக பல்கு மனஸா" வென்றதைப் பாடி அதன் மூலமாய் ஸம்ஸாரம் பரமதுக்க ரூபமென்பதையும் ராமபக்தி ஒன்றே பரமஸுக ரூபமென்பதையும் உபதேசித்தார். அதாவது:—"மனஸே! லோகத்தில் யாவரும் கண்டு பயந்து வெறுக்கும் காம க்ரோத மோஹ மத மாத்ஸர்யங்களை யாவர்க்கும் தத்வோபதேசமாய்ப் போதிக்கும் தனம் பரம ஸுகத்தைக் கொடுக்குமா? ராமனுடைய ஸன்னிதியில் பக்தியுடன் நித்ய கைங்கர்யஞ் செய்வது பரமஸுகத்தைக் கொடுக்குமா? பயமில்லாமல் தாக்ஷண்யமில்லாமல் இவ்விஷயத்தைச் சொல். சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்துப் பணத்தை ஸம்பாதித்தவர்கள் அந்தப் பலத்தால் வ்யாதி, துக்கம், மூப்பு, நரை முதலியவைகளை வென்று தீர்க்காயுஸுடன் விளங்குகிறார்களா? ஸகல ஜீவராசிகளுக்கும் காலனென்றும் அந்தகனென்றும் மிருத்யு வென்றும்

பெயர் பூண்ட யமன்திடீரென்று வந்து நம்மைப் பாசத்தால் கட்டிச், சூலத்தால் குத்தி இழுக்கும் பொழுது, 'தனமே! நான்
உன்னை ஸம்பாதிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன். தேஹத்தையும் பெண்டு பிள்ளைகளையும் பந்து மித்ரர்களையும்
துறந்து அலக்ஷ்யஞ் செய்தேன். இப்படி உன்னையே நம்பி உனக்காகவே உழைத்து, உன்னைத் தவிர வேறு புருஷார்த்தமில்லை
யென்றிருக்கும் என்னை இந்தப் பயத்தி லிருந்து நீயே காப்பாற்ற வேண்டுமென்று' கதறி அழைத்தால் அந்தத் தனம் முன்
நின்று பயப்படாதே யென்று யமனைத் தடுத்துத் துரத்துமா? பிறந்தது முதல் அன்யோன்யமாய் உடலும் உயிரும் ஒன்றாய்க் கல
ந்து பழகும் பந்துக்களையும் மித்ரர்களையும் ஒரு நிமிஷத்தில் பரம சத்ருக்களாயும் த்வேஷிகளாயும் செய்வது தனமல்லவா!
தனத்தை ஸம்பாதிக்க வேண்டிப் பொய், களவு, கொலை முதலிய மஹாபாபங்களைச் செய்கிறான். அந்தத்தனத்தை அவனிடத்தி
லிருந்து அடையவிரும்பி மற்றொருவன் அவனைக் காட்டிக்கொடுக்கிறான். லக்ஷ்மீ ஸ்த்ரீயானதால் சபல புத்தியுள்ளவளென்றும்
ஒருவரிடத்தில் நீண்ட காலம் தங்குவதில்லை யென்றும் சொல்வதுண்டு. அது மாத்ரமல்ல. நீசமான புத்தியும் அவளிடத்தில்
குடிகொண்டிருக்கிறது. தன் பர்த்தா ரூபத்திலும் குணத்திலும் வித்தையிலும் அதிகாரத்திலும் பலத்திலும் மேலானவனாயிரு
ந்தாலும் தன்னிடத்தில் பரமப்ரீதியுள்ளவனாயிருந்தாலும், சில ஸ்த்ரீகள் அவனைத் துறந்து, மேற் சொன்ன ஸகல நற்குணங்
களுமற்று, அவைகளுக் கெதிரான துர்க்குணங்களுக்கு இருப்பிடமாய், யாவரும் வெறுத்து, அவருக்கத் தகுந்த நீசனை வலுவில்
போய் அடைந்து, அவனால் படும் கஷ்டங்களை ஆனந்தமாய் நினைப்பதைப் பார்த்திருக்கிறோமல்லவா? அப்படியே, லோகத்தில்,
ஐச்வர்யம் அல்ப மனிதர்களிடத்திலேயே விசேஷமாய்க் காணப்படுகிறது. உத்தம புருஷர்களை நெருங்குகிறதில்லை. தன
மென்பது நம்மால் ஏற்பட்டு வழக்கத்தில் கொண்டுவரப்பட்டதே யொழிய அது நம்மை ஸிருஷ்டித்ததா? தங்கம், வெள்ளி,
ரத்னம் முதலியவைகளுக்கு ஜனங்களால் கௌரதையும் மதிப்பும் ஏற்பட்டதே தவிர, அவைகளால் நமக்கு இவை என்றாவது
ஏற்பட்டனவா? இந்தக் குணங்கள் அவைகளுக்கு ஸ்வபாவமாயில்லை. மனிதனில்லாத காடுகளிலும் மலைகளிலும் பாலைவனங்
களிலும் அவைகளைத் திரும்பிப் பார்க்கிறவர்கள் யார்? ஆனால், அதையும் நம்மையும் ஸிருஷ்டித்த கடவுளின் கிருபை நம்மிடத்
தில் வராமல் செய்யும் பரமசக்தி அதற்குண்டு; ஆகையால் நமக்கு அது பரமத்ரோஹி, பரமசத்ரு, மேலும், அது ஓரிடத்தில்
நிலையாயிராது; எப்பொழுதும் கைமாறிக்கொண்டே யிருக்கும்; அதே அதற்கு ஜீவாதாரம்; அதின் போக்கும் வரத்தும் மாற்ற
மும் இந்த்ரஜால மஹேந்த்ரஜாலவித்தைகளைப் போல் கண்ணையும் மனஸையும் மயக்கும். நமது இந்த்ரியங்களைக் கொடுத்து,
அவைகளைத் துன்மார்க்கத்தில் ப்ரவேசிக்கச் செய்வது தனமே. இந்த மதம் பிடித்தவனக்குக் கண்தெரியாது; முன்பு தன்னு
டன் பழகினவர்களை அடையாளந் தெரியாது; காது கேட்காது; ஏழைகளின் முறை காதில் ஏறாது; தான் முன்பு இருந்த
ஸ்திதியும் அநுபவித்த கஷ்டங்களும் மறந்து, பிறந்தது முதல் தனவானாகவே இருந்ததுபோல் எண்ணுவான். ஆகையால்
அகக்கண் புறக்கண் இவ்விரண்டையும் மறைப்பது தனமே. தனத்தைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் பெரிய பள்ளத்தை
வெட்டி அதில் புதைப்பதுண்டு. அப்பொழுது அந்தக் குழியிலுள்ள மண்ணை எடுத்து வெளியில் தன்பக்கமாய்ப் போட்டுக்
கொள்ளுகிறான். தனத்தை அந்தக் குழியில் ஜாக்ரதையாய் வைத்து மூடுகிறான். அப்பொழுது அந்தப் பூமி அவனைப் பார்த்து

"மூடா! நீ இவ்வளவு கஷ்டப்பட்டு ஸம்பாதித்த தனம் யாவற்றும் என்னைச் சேர்ந்ததே. இதற்குப் பதிலாய் உனக்கு நான் கொடுப்பது என்னவென்றால் என்னிடத்திலுள்ள மண்ணைத் தோண்டி எடுத்து நீயே உன் வாயில் போட்டுக் கொள்ளவேண்டியது தா"னென்று சொல்வதுபோலிருக்கிறது. இப்படிப்பட்ட துர்க்குணங்களையும் அபாயங்களையும் குணங்களா யுடையத் தனத்தை ஸம்பாதிக்க ஆயுள்முழுவதும் கஷ்டப்படுவது ஸுகமா? அல்லது ஸகல ஐச்வர்யத்திற்கும் நாதனாய் ஸ்ரீபதியாய் பக்திபரிபாலனாய்த், தன்னை ஆச்ரயித்த ஜனங்களுக்குக் கல்ப விருக்ஷத்தைப் போன்றவனாய் ஸகல அனிஷ்டங்களையும் போக்கிப் பரம மங்களத்தையும் கொடுப்பவனா யிருக்கும் தர்மமூர்த்தியான ராமசந்த்ரனுடைய ஸந்நிதியில் எப்பொழுதும் கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும் மஹா பாக்யத்தை அடைவதற்கு ப்ரயத்னஞ் செய்வது ஸுகமா? ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களையும் அந்தக்கரணத்தையும் அடக்குவதென்ற சமம் தமம் முதலிய குணங்களே ஸகல பாபங்களையும் போக்கும் ஆகாசகங்கையாகும். அந்தக் கங்கையில் ஒவ்வொரு நிமிஷமும் ஸ்நானஞ்செய்து பாபபுண்யங்களை ஒழித்துப் பகவானுடைய ஸாயுஜ்யத்தை அடைவது ஸுகமா? அல்லது, இந்த்ரியங்களாலும் மனஸாலும் அனுபவிக்கும் அநித்யமாயும் அபாயகரமாயுமிருக்கும் விஷய ஸுகங்களே சேற்றாலும் அசுத்தமான பதார்த்தங்களாலும் க்ரூரமான ஜந்துக்களாலும் நிறைந்த பாழுங் கிணறாகும்; அந்தத் துர்க்கந்தமான கிணற்றில் முழுகிக்கொண்டிருப்பது ஸுகமா? நான் என்னுடையதென்ற ஆசாபிசாசங்கள் பிடித்திருக்கும் அல்ப மனுஷ்யர்களைப் புகழ்வதில் நமது வித்யையையும் கவித்வத்தையும் பேசுந் திறமையையும் பாழாக்குவது ஸுகமா? அல்லது, ஸர்வஜ்ஞரான பரமசிவனால் கொண்டாடப்பட்ட ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியின் அனந்தகல்யாண குணங்களை வாயார, மனஸார வர்ணித்து நம்மைக் கிருதார்த்தர்களாய்ச் செய்துகொள்வது ஸுகமா? மனஸே! பக்ஷபாதமில்லாமல் நிஜத்தைச் சொல்"லென்று தன் மனஸைப் பார்த்துப் போதிப்பதுபோல், தஞ்சாவூர் அரசனிடத்திலிருந்து தன்னை அழைக்கவந்த தன் மித்ரனுக்கு உபதேசித்தார்.

மே—21.

கீர்த்தனம். 37.

கீரவாணி—ஆதி.

பல்லவி.

கலிகியுண்டே கதா கல்குனு? காமிதபலதாயக!

அனுபல்லவி.

கலினி இங்கித மெருகக நின்னுடுகொண்டி;
த்ஸலமுசேயக; நா தலகு த்ஸக்கனி வ்ராத

சரணம்.

பாகவதாக்ரேஸருலகு நாரத ப்ரஹ்லாத பராசர ராமதாஸுலு பாகுக
ஸ்ரீரகுராமுனி பதமுல பக்திஜேஸின ரீதி, த்யாகராஜுனிகிபுடு

பதவுரை.

காமிதபலதாயக	—வேண்டும் பலங்களைக் கொடுக்கிறவனே!
இங்கித மெருகக	—இங்கிதந் தெரியாமல்
நின்னு ஆடுகொண்டி;	—உன்னைக் கோபித்தேன் (அந்தக் காரணத்தால்)
த்ஸலமு சேயக.	—பிடிவாதம் செய்யாதே.
கலினி	—இந்தக் கலியுகத்தில்
நா தலகு த்ஸக்கனி வ்ராத	—என் நெற்றியில் அழகான எழுத்து
கலிகியுண்டேகதா	—ஏற்பட்டிருந்தாலல்லவா
கல்குனு.	—எனக்கு உன் கிருபை கிடைக்கும்.
பாகவதாக் ரேஸருலகு	—பாகவத ச்ரேஷ்டர்களான
நாரத, ப்ரஹ்லாத, பராசர, ராமதாஸுலு	—நாரதர், ப்ரஹ்லாதர், பராசரர், ராமதாஸ் ஸ்வாமிகள் முதலியவர்கள்
பாகுக	—நன்றாய்
ஸ்ரீரகுராமுனி	—ஸ்ரீராமசந்த்ரனுடைய

பதமுல	—திருவடிகளைப்
பக்திஜேஸின ரீதி	—பக்திசெய்த மாதிரியாய்
த்யாகராஜுனிகி	—த்யாகராஜனுகிற எனக்கு
இபுடு	—இப்பொழுது (நல்ல எழுத்து ஏற்பட்டாலல்லவா).

பொழிப்புரை.

வேண்டும் பலங்களைக் கொடுக்கிறவனே! இங்கிதந்தெரியாமல் உன்னைக் கோபித்தேன். (அந்தக் காரணத்தால்) தாமஸஞ் செய்யாதே. இந்தக் கலியுகத்தில், என் நெற்றியில் அழகான எழுத்து ஏற்பட்டிருந்தாலல்லவா எனக்கு உன் கிருபை கிடைக்கும்? பாகவதச்ரேஷ்டர்களான நாரதர், ப்ரஹ்லாதர், பராசரர், ராமதாஸ்ஸ்வாமிகள் முதலியவர்கள் நன்றாய் ஸ்ரீராமசந்த்ரனுடைய திருவடிகளைப் பக்திசெய்த மாதிரியாய், த்யாகராஜனுகிற எனக்கு இப்பொழுது (நல்ல எழுத்து ஏற்பட்டாலல்லவா உன் கிருபை கிடைக்கும்?).

நோட்டுகள்.

பாகவதாக் ரேஸ்ருலகு:—'எந்தரோ மஹானுபாவு'லென்ற கீர்த்தனத்தில் 'பரமபாகவத' வென்ற சரணத்திலும், 'வீதம்ம மாயம்ம' 'ஸங்கீத ஞானமு வினு' 'நாதலோலுடை' யென்ற கீர்த்தனங்களிலும் பாகவதர்களுடைய பெயர்களைப் பார்க்க.

பராசரர்—வஸிஷ்டரின் பேரன். கிருஷ்ணத்வைபாயன வ்யாஸரின் பிதா. விஷ்ணுபுராணத்தை வெளியிட்டவர்.

ராமதாஸ்:—ஔரங்காபாத் ராஜ்யத்தை ஆண்ட தானிஷாவென்ற அரசனுடைய காலத்தில் கோதாவரி ஜில்லா பத்ராசலம் தாலுக்காவில் லிங்கன்னரென்ற ஆந்த்ரப்ராஹ்மணோத்தமரின் புத்ரர்; கர்ப்பபாகவதர்; கபீர்தாஸரால் தாரகமந்த்ரத்தை உபதேசிக்கப் பெற்றவர்; தன் பிதா நடத்திவந்த அந்தத் தாலுக்கா தகசீல் வேலையைப் பெற்று எல்லோர்க்கும் திருப்தியாய் நடத்திவந்தார். அங்கேயுள்ள ஸ்ரீராமனுடைய ஆலயம் ஜீர்ணமாயிருக்கக் கண்டு தான் வஸூல்செய்து தானிஷாவுக்கு அனுப்பவேண்டிய 12–லக்ஷ வராகன்களை அந்த ஆலயஜீர்ணோத்தாரணத்திற்காகச் சிலவழித்துவிட்டார். தானிஷா அவரைப் பன்னிரண்டு வர்ஷங்கள் வரையில் சிறைச்சாலையிலடைத்து மிகவும் ஹிம்ஸித்தான். தான் இவ்வளவு காலமாய் ராமனை ப்ரார்த்தித்தும் ப்ரயோஜனமில்லையென்று கண்டு ஸீதையைப் ப்ரார்த்திக்க, அவள் ராமனிடத்தில் சிபார்சுசெய்தாள். முடிவில் ராமலக்ஷ்மணர்கள் ஸேவகவேஷந்தரித்து அர்த்தராத்ரியில் தானிஷாவின் அந்தப்புரத்தில் போய் 12–லக்ஷ வராகன்களையும் செலுத்தி ரசீதுபெற்று மறைந்தார்கள். தானிஷா மோஹந் தெளிந்து, வந்தவர்களின் அழகாலும் தேஜஸாலும் ப்ரமித்து, அவர்களை மறுபடியும் காட்டும்படி ராமதாஸ்ஸ்வாமியை வேண்டினான். அப்பொழுது ராமதாஸரென்று பெயர்பெற்ற கோபன்னர் அவனுடன் பத்ராசலம் போய் ராமனை ப்ரார்த்தித்துத் தர்சனங்கொடுக்கச்செய்தார். தானிஷா ராமபக்தனாய் அந்தத் தாலுக்கா முழுவதையும் ராமார்ப்பணஞ்செய்தான். (எமி தோவ, க்ஷீரஸாகரவென்ற கீர்த்தனங்களிலும் இதை வெளியிட்டிருக்கிறார்.)

முதல் அக்ஷரத்தில் 2 தள்ளி எடுப்பு.

பல்லவி.

1		ரீ . நீ ,, ஸ ரீ கா ,, ,, ,, ,, மா	கா ,, ,, ,, ,, மா ,, ,, கா ரீ ,, ,,
		க வி கியுண் . டே க	தா க ல்கு ணு
2	ரீ	ரி நி ,, ஸ ரீ கா ,, ,, ,, ,, ம க	ரி க ம ப பா ப ம ம க கா ரீ ,, ,,
		க வி கியுண் டே க	தா க ல்கு ணு
3	ரீ	ரீ க ம பா பா பா ம ப தா	த பா ம ப மா க ரீ கா ரீ ,, ,,
		கா மி த ப ல தா	ய க
4	ரீ	ரீ க ம பா தா நீ ஸா ,, ,,	,, ,, ,, ,, நி த ப ம ரீ கா ரீ ,, ,,
		சா மி த ப ல தா	ய க
5	ரீ	ரீ க ம பா தா நீ ஸ ரி கா	க ரி ரி ஸ ஸ நி நி த த ப ப ம ம க க ரி
		கா மி த ப ல தா	ய க
6	ரீ		

அனுபல்லவி.

1		ப த பா தா நீ ஸா ,, ,, நி ஸ	நீ கா ரீ கா மா கா ரீ ஸா
		க வி னீ ங் கி த மெரு	க க தீ ன் ஞ டு கொண்டி
2	ஸா	ஸ ஸ ,, ஸ ஸா நி நி த த ப த நி ஸ	ரி ஸ நி நி ,, த பா ப ம ம க கா க ரி
		தஸல முஸே ய க நா	தல குத்ஸ க்க ணி வ்ாாத
3	ரீ		

சரணம்.

1		பா ,, ,, ப ப ப ம கா ரி க மா	,, ,, ஸ ஸா ஸ ரீ ரி க மா கா ரீ
		பா கவ தா க்ரே	ஸரு லகு நா ர த
2	ரீ	ரீ க ம பா தா நீ ஸா ,, ,,	,, ,, நி ் நி ,, த பா மா கா ரீ ரீ
		ப்ர ஹ்லா த ப ரா	சர ராம தா ஸ ் லு
3	ரீ	பா த ப தா நீ ஸா ,, ,, நி ஸ	ஸா ரீ ,, ,, ரி க மா கா ரீ ஸா
		பா கு கா ஸ்ரீ ரகு	ரா முனி பா த மு லு
4	ஸா	ஸா ,, ,, ஸ ஸ ஸ நி தா ப த நி ஸ	ஸா நி ஸ ,, த பா மா கா ரி ரி ரீ
		ப க்திஜே ஸி ன ரீ தி	த்யா கரா ஜ ் னி கி புடு
5	ரீ		

மே--16.
ஸகரிமபதநிபநிஸ
ஸபநிதபகரிஸ

கீர்த்தனம் 38.

பிந்துமாலினி—ஆதி.

பல்லவி.

எந்த முத்தோ! எந்த ஸொகஸோ!
எவரிவல்ல வர்ணிம்பதரமே?

அநுபல்லவி.

எந்தவாரலைனகானி
காமசிந்தாக்ராந்துலைருரு.

சரணம்.

அத்தமீத கனுலாஸகு தாஸுலை,
ஸத்தபாகவதவேஸுலரி.
துத்த பாலருசி தெலியு ஸாம்யமே,
துரீணுடௌ த்யாகராஜனுதுடு

பதவுரை.

துரீணுடௌ	—யாவர்க்கும் முதன்மையானவனும்
த்யாகராஜனுதுடு	—த்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனுமான ராமன்
எந்த முத்தோ!	—எவ்வளவு அழகோ!
எந்த ஸொகஸோ!	—எவ்வளவு ஒய்யாரமோ!
எவரிவல்ல	—யாரால்
வர்ணிம்பதரமே?	—வர்ணிக்கமுடியும்?
எந்தவாரலைனகானி	—எப்படிப்பட்டவர்களானாலும்
காம சிந்தாக்ராந்துலைருரு.	—தங்களுடைய காமத்தைப் பூர்த்திசெய்வதைப்பற்றின கவலையில் மூழ்கினவர்களாயிருக்கிறார்கள்.
அத்தமீத	—(சிலர்) மாமியாரிடத்தில் வைத்த
கனுலாஸகு	—ஆசைக்கு

தாஸுலே	—அடிமைகளாய்,
ஸத்த பாகவத வேஸுலேரி.	—ஸாரமுள்ள பகவத்பக்தர்களின் வேஷத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள்.
துத்த	—அது அகப்பை
பாலருசி	—பாலின் ருசியை
தெலியு ஸாம்யமே.	—அறிவதுபோலாகும்.

பொழிப்புரை.

யாவர்க்கும் முதன்மையானவனும் த்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனுமான ராமன் எவ்வளவு அழகோ! எவ்வளவு ஓய்யாரமோ! யாரால் வர்ணிக்கமுடியும்! எப்படிப்பட்டவர்களானாலும் தங்களுடைய காமத்தைப் பூர்த்திசெய்வதைப் பற்றின கவலையில் மூழ்கினவர்களாயிருக்கிறார்கள். சிலர் மாமியாரிடத்தில் வைத்த ஆசைக்கு அடிமைகளாய், ஸாரமுள்ள பகவத்பக்தர்களின் வேஷத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். இது அகப்பை பாலின் ருசியை அறிவதுபோலாகும்.

நோட்டுகள்.

ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் வஸித்த ஊரில் ஒரு ப்ராஹ்மணன் பாகவதோத்தமனைப்போல் விபூதிருத்ராக்ஷதுளஸீஹாரதாரியாய் எப்பொழுதும் பகவந்நாமங்களைக் கோஷித்துக்கொண்டிருந்தான். வாஸ்தவமாய் மஹாதுஷ்டன்; பொறாமையுள்ளவன்; பக்தியில்லாதவன்; வேஷம்போட்டு ஜனங்களை மயக்கிப் பணம் பறிப்பவன்; த்யாகராஜஸ்வாமிகளின் பக்தியையும் கானத்தையும் கீர்த்தியையும் சிஷ்யகணங்களையும் பரிவாரங்களையும் மஹோத்ஸவங்களையும் கண்டு பொறுக்காமல், ப்ரதிதினமும் உஞ்சவிருத்திக்குப் போகும்பொழுது அவருடைய வீட்டுவாசலில் நின்று, ஜாலரைச் செவிடுபடும்படி அடித்துத், தொண்டை கிழியக் கத்தி, உள்ளே பாடுகின்ற கீர்த்தனங்கள் யாதொன்றும் கேட்காமல் அடிப்பான். ஸ்ரீஸ்வாமிகளையும் சிஷ்யகோடிகளையும் அபாண்டமாய்க் குற்றஞ்சாட்டித் தூஷிப்பான். இதைப்பற்றி எல்லோரும் ஸ்ரீஸ்வாமிகளிடத்தில் முறையிட, அவர் அதைக் கவனிக்காதது போலிருந்தார். முடிவில் இந்தக் கீர்த்தனத்தில் அவனை அடக்கிக், காலமுள்ளவரையில் லோகத்தாருடைய நிந்தைக்குள்ளாகும்படி செய்துவிட்டார். அவனுடைய ரஹஸ்யம் அவருக்குத்தான் தெரியும். அவனுக்கு மூத்த பார்யை இறந்து, இரண்டாவது பார்யையை விவாஹஞ்செய்துகொண்டிருந்தான். அந்தப் பெண் அதிபால்யமாகையாலும் ப்ரௌடையாகாததாலும், அதன் தாயாகிய விதவாஸ்த்ரீயைத் தன் வீட்டில் ஸஹாயத்திற்கென்று வேஷம்போட்டு வைத்துக்கொண்டு ரஹஸ்யமாய் அனுபவித்துக்கொண்டிருந்தான், இப்படி வெளிக்குப் பாகவதனைப்போல் வேஷம்போட்டு, அந்தரங்கத்தில் பரமதுன்மார்க்கனாயிருப்பவனுக்குப் பகவானுடைய மஹிமையும் ஸ்வரூபத்தின் அழகும் தெரியாதென்று கருத்து.

எந்த வாரலைன கானி :—'எந்த நேர்ச்சின' வென்ற கீர்த்தனத்தின் நோட்டைப் பார்க்க.

6 தள்ளி எடுப்பு.

பல்லவி.

1		கா ,, ,, ரீ கா ,, ,,	மா ,, ,, ,, ,, கா ,, ,, ரீ ஸா நீ
		எங் த மு	த்தோ எங் த ஷொ க
2	ஸா ,, ,, ,, ,,	கா ,, ,, ரீ கா மா	மப மப மப கா ,, ,, ரீ ஸா நீ
	ஸோ	எங் த மு	த்தோ எங் த ஷொ க
3	ஸா ,, ,, ,, ,,	கா ,, ,, ரீ கா மா	ப நி ஸா பா ஸ நி ஸா தா பா கா
	ஸோ	எங் த மு	த்தோ எங் த ஸொக
4	த ப க ரி ஸ ரி	த தா பா ,, பா	நி த தா பா ,, ,, பா பா கா கா
	ஸோ	எவ ரீ ல் ல	வ ர் ணி ம டு
5	த ப க ரி ஸ ரி	முதல் சங்கதியைப் பாடி நாலாவதைத் திருப்பவும்.	
	மே		

அநுபல்லவி.

1		பா நீ ஸா ,, ,, ரீ	ஸா ,, ,, ,, ,, ப நி ஸா கா ,, ,, ரீ
		எங் த வா ரு	லே ன கா ணி
2	ஸா ஸா ,, ,,	ஸ நி ஸா ஸ த தா த ப	பா கா பா ,, ,, ,, ,, ,, ,, கா ,, ,,
	கா ம	சி ந்_ர க்ர	ந்து லே ர
3	த ப க ரி ஸா		
	ரு		

சரணம்.

1		பா பா பா ,, ,, பா	த த பா ,, ,, கா பா கா ,, ,, ரீ
		அ த்த த	க ஞு லா வ கு தா ஸ
2	ஸா ,, ,, ,, ,,	கா ரீ கா ,, ,, கா	மா மா ,, ,, ஸ க ரி க ம ப நி த தா
	லே	வத் த பா க	வ த வே ஸ லே
3	பா ,, ,, ,, ,,	பா நீ ஸா ,, ,, ரீ	ஸ்ர் ஸா ,, ,, ப நி ஸா கா ,, ,, ரீ
		து த்த பா ல	ரு சி தெலி யு ஸாம் ய
4	ஸா ,, ,, ,, ,,	ஸ நி ஸா ஸ த தா தா	பா ,, ,, கா கா பா ,, ,, ப க கா
	மை	து ரீ டௌ	டௌ த்யா க ரா ஜ ஞு
5	த ப க ரீ ஸ ரீ		
	து கு		

மே—8.

கீர்த்தனம் 39.

தோடி—தேசாதி.

பல்லவி.

கடதேர ராதா? மனஸா!

அநுபல்லவி.

எடலேக பஜனஜேஸி, நீயெட கல்கு நிஜதப்பரலனு தெலிஸி

சரணம்.

கலசித்த லௌஹிகமனு சிருங்கலமந்து தகலகயே
யுலூகலபத்துனிகி நிஜதாஸுடை வெலஸில்லி
த்யாகராஜு மாட வினி.

பதவுரை.

மனஸா	—மனஸே!
த்யாகராஜு	—த்யாகராஜனுடைய
மாட வினி	—வார்த்தையைக் கேட்டு,
கலசித்த	—துஷ்டர்களுடைய மனஸாகிற
லௌஹிகமனு	—இரும்பாற் செய்யப்பட்ட
சிருங்கலமந்து	—விலங்கில்
தகலகயே	—அகப்படாமல்,
உலூகல பத்துனிகி	—உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணபரமாத்மாவிற்கு
நிஜதாஸுடை	—உண்மையான தாஸனாய்
வெலஸில்லி	—விளங்கி;
எடலேக	—இடைவிடாமல்
பஜனஜேஸி	—பஜனை செய்து

நீ யெட கல்கு	—உன்னிடத்திலுள்ள
நிஜதப்பாலனு	—நிஜத்தையும் பொய்யையும்
தெலிஸி	—அறிந்து
கடதேர ராதா	—கடைத்தேறக்கூடாதா?

பொழிப்புரை.

மனமே! த்யாகராஜனுடைய வார்த்தையைக் கேட்டு, துஷ்டர்களுடைய மனஸாகிற இரும்பால் செய்யப்பட்ட விலங்கில் அகப்படாமல், உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணபரமாத்மாவிற்கு உண்மையான தாஸனாய் விளங்கி, இடைவிடாமல் பஜனை செய்து, உன்னிடத்திலுள்ள நிஜத்தையும் பொய்யையும் அறிந்து கடைத்தேறக்கூடாதா?

நோட்டுகள்.

உலூகல பத்துனிகி:—ஒரு நாள் தன் தாய் யசோதை பாலைக் காய்ச்சிக்கொண்டிருக்கும் ஸமயம் பார்த்து, கிருஷ்ணன் உள்ளே புகுந்து ஒரு உரலைக் கவிழ்த்து, அதன் மேலேறிப் பால் தயிர்ச்சட்டிகளை உடைத்துப், பால் தயிர் வெண்ணெய்களை எடுத்துத் தின்று, பூனைகளுக்கும் குரங்குகளுக்கும் நாய்களுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தார். யசோதை அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தண்டிக்க எண்ணி, ஒரு கயிற்றால் உரலுடன் அவரைச் சேர்த்துக் கட்ட நினைத்தாள். எவ்வளவு கயிறுகளைப் போட்டு முடிந்தாலும் இரண்டங்குலம் குறைந்துகொண்டேயிருந்தது. அவள் வெகுச்ரமப்படுவதைக் கண்டு, பகவான் தானாகவே கட்டுப்பட்டார்:—பாகவதம். X. 9.

‘அப்ப ராமபக்தி’ யென்ற கீர்த்தனத்தில் ‘கபி வாரிதி’ யென்ற சரணத்தைப் பார்க்க.

6 தள்ளி எடுப்பு.

பல்லவி.

1			ஸா	நீ	கா	,, ,,	நீ	கா	,, ,,	,, ,, நீ	,, ,, நீ	,, ,, நீ
			க	ட	தே		ர	ரா		தா	ம	ன
2	ஸா ,, ,,	,, ,,	ஸா	நீ	கா	,, ,,	நீ	கா	,, ,,	,, ,, ஸ நி	கா ஸ ரி	கா ரீ
	ஸா		க	ட	தே		ர	ரா		தா	ம	ன
3	ஸ ரி க ரி	ரி ஸ	ஸா	நீ	கா	,, ,,	நீ	கா	,, ம	,, ,, த ப	ப . ம ம க	ம க ரீ
	ஸா		க	ட	தே		ர	ரா		தா	ம	ன
4	த ப ம க	ரி ஸ	ஸா	நீ	கா	,, ,,	கா	மா	,, த	,, ,, கா	கா மா	பா ,, ,,
	ஸா		க	ட	தே		ர	ரா		தா	ம	ன
5	த ப ம க	ரி ஸ	ஸா	நீ	கா	,, ;,	கா	மா	,, த்	,, ,, த நி	ஸா ஸ நி	த ப ம ப
	ஸா		க	ட	தே		ர	ரா		தா	ம	ன
6	த ப ம க	ரி ஸ	ஸா	நீ	கா	,, ,,	கா	மா	,, த	,, ,, த நி	ஸ ரி க ரி	ஸ நி ஸ நி
	ஸா		க	ட	தே		ர	ரா		தா	ம	ன

அனுபல்லவி.

1			தா	பா	கா	,, ,,	மா	ப	த நீ	தா த நி	ஸா த நி	ஸா நீ
			எ	ட	லே		க	ப	ஜ	ன	ஜே வி	நீ
2	த ப ம க	ரி ஸ	கர்	கா க	ரி	ரீ	ரீ	ஸா	ஸா	நீ த நி	ஸா ஸ நி	த ப மா
	யெ	ட	கல்	கு		நி	ஜ	த	ப்	ப ர	ல னு	தெலி வி

சரணம்.

1			தா	பா	கா	,, ,,	மா	பா	,, ,,	,, ,, கா	கா ம ப	த ப ப ம
			க	ல	சி	த்	த	லெள		ஹி	க	மனு
2	பா ,, ,,	,, ,,	ரீ	ஸா ஸ	நி	தா	நீ	வ ஸ	ஸா	,, ,, கா	,, ,, ம ப	தா மா
	இ ரு	ங்	க	ல	ம	ந்	து	தக		ல	க	யே
3	ஸா ,, ,,	,, ,,	ஸ நி	த ப	கா	,, ,,	மா	ப	த நீ	,, ,, த நி	ஸா த நி	ஸா நீ
	யு	ஹு	க	ல	ப	த்	து	ணி	இ	நி	ஜ தா	ஸ
4	ப ம க க	ரி ஸ	கா	கா க	ரி	ரீ	ஸா	ஸா	ஸா	நீ த நி	ஸா ஸா	ஸ நி த ப
	டை வெ	ல	ஸி	ல்	வி	த்	யா	க		ரா ஜ	மாட	வினி

மே—28.
ஸரிகமதஸ
ஸதநிபமகரிஸ

கீர்த்தனம் 40.

ஸரஸ்வதீமனோஹரி—தேசாதி.

பல்லவி.

எந்த வேடுகொந்து? ராகவ! பந்த மேலரா? ஓ ராகவ

அனுபல்லவி.

சிந்த தீர்த்ஸு கெந்த மோடிரா?
அந்தராத்ம! நா செந்தரானி தின்னு

சரணம்.

சித்தமந்து நின்னு ஜூசு ஸௌக்யமே
உத்தமம்பனுத்ஸு உப்பொங்குத்ஸுனு,
ஸத்தாமாத்ரமா! த்ஸால நம்மிதி;
ஸார்வபௌம! ஸ்ரீத்யாகராஜனுத!

பதவுரை.

சித்தமந்து	—என் மனவில்
நின்னு	—உன்னைப்
ஜூத்ஸு ஸௌக்ய்மே	—பார்க்கும் ஆனந்தமே
உத்தமம்பு அனுத்ஸு	—உத்தமமென்று
உப்பொங்குத்ஸுனு,	—ஸந்தோஷித்துக்கொண்டு,
ஸத்தாமாத்ரமா	—ஸத்ஸ்வரூபியே!
த்ஸால	—விசேஷமாய்
நம்மிதி.	—உன்னை நம்பினேன்.

ஸார்வபௌம !	—ஸார்வபௌம !
ஸ்ரீத்யாகராஜனுத	—ஸ்ரீத்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே !
சிந்த தீர்த்ஸ்வாடகு	—என் கவலையைத் தீர்ப்பதற்கு
எந்த மோடிரா !	—எவ்வளவு பிடிவாதம்!
அந்தராத்ம!	—அந்தர்யாமியே !
நா செந்த ரானி	—என் ஸமீபத்தில் வராமலிருக்கும்
நின்னு எந்தவேடுகொந்து	—உன்னை நான் எவ்வளவுதான் வேண்டிக்கொள்வேன் ?
ஓ ராகவ ! பந்தமு ஏலரா?	—ஓ ராகவ ! ஏன் என்னுடன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாய் ?

பொழிப்புரை.

ராகவ ! என் மனவில் உன்னைப் பார்க்கும் ஆனந்தமே உத்தமமென்று ஸந்தோஷித்துக்கொண்டு, உன்னை விசேஷமாய் நம்பினேன். ஸத்ஸ்வரூபியே ! ஸார்வபௌம ! ஸ்ரீத்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே! என் கவலையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு பிடிவாதம் ! அந்தர்யாமியே ! ஓ ராகவ ! என் ஸமீபத்தில் வராமலிருக்கும் உன்னை எவ்வளவுதான் வேண்டிக்கொள்வேன் ? ஏன் என்னுடன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாய் ?.

2-வது அக்ஷரத்தில் 2 தள்ளி எடுப்பு.

பல்லவி.

1		தா நீ பா	,, ,, மா	கா ,, ,,	,, ,, ரீ	,, ,, ஸா	,, ,, ரீ
		எ ந்த வே	டு	கொந்	து	ரா	க
2	கா ,, ,, ,, ,,	தா நீ பா	,, ,, மா	கா ,, ,,	,, ,, ரிக	ம க க ரி	ஸா ரீ
	வா	எ ந்த வே	டு	கொந்	து	ரா	க
3	கா ,, ,, ,, ,,	தா நீ பா	,, ,, மா	க ம த ப	மா ப ம	கா க ரி	ஸா ரீ
	வா	எ ந்த வே	டு	கொந்	து	ரா	க
4	கா ,, ,, ,, ,,	தா நீ பா	,, ,, மா	க ம த ஸ்	ஸா ஸ த	நி ப ம க	ரி ஸ ரீ
	வா	எ ந்த வே	டு	கொந்	து	ரா	க
5	கா ,, ,, ,, ,,	பா மா கா	,, ,, ரீ	ஸ ரி கா	கா ரி க	மா தா	,, ,, ஸா
	வா	பந் த மே	ல	ரா	ஓ	ரா	க
6	ரி க ம க க ரி	ஸ்ரி த நி பா	,, ,, மா	த ப ப ம	ம க ப ம	க ரி ம க	ரி ஸ ரீ
	வா	எ ந்த வே	டு	கொந்	து	ரா	க
7	கா ,, ,, ,, ,,						
	வா	பந்த மேலரா					

அனுபல்லவி.

1		மா தா ஸா	,, ,, ரீ	கா ,, ,,	,, ,, மா	கா ரீ க	மா கா
		சிந் த தீ	ர்த்வ	ட	கெந்	தமோ	டி
2	ரீ ,, ,, ,, ,,	ஸா ரீ கா	,, ,, ரீ	ஸா ,, ,,	,, ,, தா	நீ பா	,, ,, மா
	ரா	அந் த ரா	த்ம	நா	செந்	த ரா	ணி
3	க ரி ஸ ரி க ம	ஸா ரீ கா	,, ,, ரீ	ஸ ரி க ரி	ஸா தா	நீ பா	,, ,, மா
	நின்	அந் த ரா	த்ம	நா	செந்	த ரா	ணி
4	க ரி ஸ ரி க ம						
	நின்						

சரணம்.

1		பா மா பா	,, ,, மா	கா கா	,, ,, ரீ	கா ஸ ரி	கா ரீ
		சி த்த ம	ந்து	நின் னு	ஜூ	சு வெள	க்ய
2	கா ,, ,, ,, ,,	ஸா தா ஸா	,, ,, தா	ஸா ஸா	,, ,, ரீக	ம க க ரி	ஸா ரீ
	மே	உ த்த மம	ப	னு த்ஸ	உப்	பொங்	கு
3	கா கா ,, ,,	மா தா ஸா	,, ,, ரீ	கா ,, ,,	,, ,, மா	கா ரீ க	மா கா
	த்ஸ னு	ஸத் தா மா	த்ர	மா	த்ஸரா	ல நம்	மி
4	ரீ ரீ ,, ,,	ஸா ரீ கா	,, ,, ரீ	ஸா ,, ,,	,, ,, தா	நீ பா	,, ,, மா
	தி	ஸார் வ பௌ	ம	ஸ்ரீ	த்யா	க ரா	ஜ
5	க ரி ஸ ரி க ம						
	னு த						

மே—28.
ஸரிகமபமபதநிஸ
ஸநிதநிபமகமரிஸ

கீர்த்தனம் 41.

மாளவி—ஆதி.

பல்லவி.

நெனருஞ்சினானு, அன்னிடிகி நிதானுடனி நேனு, நீதுபை

அநுபல்லவி.

கனகஜீமூதாசுக! வனதிகம்பீர! நீ பாதமுலபை

ச ணம்.

கலிலோ மாடல நேர்த்ஸ¯கொனி,
காந்தலனு தனயுல ப்ரோத்ஸ¯டகு
சிலாத்முலே பலுக நேரனுரா,
ஸ்ரீத்யாகராஜாப்த! நீ யெட

பதவுரை.

கனஅக ஜீமூத ஆசுக —கோரமான பாபங்களென்ற மேகங்களுக்குப் பெருங்காற்றைப் போன்றவனே!
வனதிகம்பீர —ஸமுத்ரத்தைப்போல் காம்பீர்யமுடையவனே!
நீ பாதமுலபை (நெனரு உஞ்சினானு)—உன் திருவடிகளில் (என் ப்ரேமையை வைத்தேன்).
அன்னிடிகி —நீ எல்லாவற்றிற்கும்
நிதானுடனி —காரணமென்று
நீதுபை —உன்னிடத்தில்
நேனு —நான
நெனரு உஞ்சினானு —ப்ரியம் வைத்தேன்.
கலிலோ —இந்தக் கலியுகத்தில்

மாடல	—சமத்காரமான வார்த்தைகளைக்
நேர்த்ஸூகொனி	—கற்று,
காந்தலனு	—பெண்டுகளையும்
தனயுல	—குழந்தைகளையும்
ப்ரோத்ஸூடகு	—காப்பாற்றுவதற்கு
சிலாத்முலே	—கரும் பாறையைப்போல் தயவில்லாமல்
பலுக, நேரனுரா	—பேச என்னால் முடியாது.
ஸ்ரீத்யாகராஜாப்த	—ஸ்ரீத்யாகராஜனுக்கு மித்ரனே ?
நீயெட	—உன்னிடத்தில் (ப்ரியம் வைத்தேன்).

பொழிப்புரை.

கோரமான பாபங்களென்ற மேகங்களுக்குப் பெருங்காற்றைப் போன்றவனே! ஸமுத்ரத்தைப்போல் காம்பீர்யமுடையவனே! உன் திருவடிகளில் (என் ப்ரேமையை வைத்தேன்). எல்லாவற்றிற்கும் நீ காரணமென்று உன்னிடத்தில் நான் ப்ரியம் வைத்தேன். இந்தக் கலியுகத்தில் சமத்காரமான வார்த்தைகளைக் கற்று, பெண்டுகளையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்குக், கரும் பாறையைப்போல் தயவில்லாமல் பேச என்னால் முடியாது. ஸ்ரீத்யாகராஜனுக்கு மித்ரனே! உன்னிடத்தில் (ப்ரியம்வைத்தேன்).

நோட்டுகள்.

சிலாத்முலே :—‘ துடுகுகல’ வென்ற கீர்த்தனத்தில் தெலியனி நடவிடவென்ற சரணத்தைப் பார்க்க.

காந்தலனு :—ஷை கீர்த்தனத்தில் ஸதுலகு என்ற சரணத்தையும கலி நருலகு வென்ற கீர்த்தனத்தின் சரணத்தையும் பார்க்கவும்.

ஸரிகமபமபதநிஸ
ஸநிதநிபமகமரிஸ

பல்லவி.

1	தா நீ	பா ,, ,,	மா கா	பம கம	ரீ ,, ,,	,, ,, ரீ	கா மா	பா மா
	நெ ண	ருஞ்	சி	ஞ	னு	அன்	னி	டி கி
2	ஸ நி த நி	பா ,, ,,	மா கா	பம கம	ரீ ,, ,,	,, ,, ரீ	கா மா	பா மா
	நெ ண	ருஞ்	சி	ஞ	னு	அன்	னி	டி கி
3	ா தா	,, ,, நீ	ஸா ஸ்ர்	ஸ நி த நி	ப ம ம க	மா ஸா	,, ,, ஸா	ஸா ,, ,,
	தீ . தா	னு	ட ணீ	நே	னு	நீ	து	பை
4	ம ா தா	,, ,, நீ	ஸ நி த நி	ஸ நி த நி	ப ம க ம	மா ஸா	,, ,, ஸா	ஸா ,, ,,
	நீ தா	னு	ட ணி	நே	னு	நீ	து	பை
5	மா தா	,, ,, நீ	ஸ ரி ம ரி	ஸ நி த நி	ப ம ஃ ம	மா ஸா	,, ,, ஸா	ஸ்ர் ,, ,,
	நி தா	னு	ட ணி	நே	னு	நீ	து	பை

அனுபல்லவி.

1	மா தா	,, ,, நீ	ஸ்ா ,, ,,	ஸ நி த நி	ஸா ,, ,,	,, ,, ,,	ஸ நி த நி	பா மா
	க ஞ	க	ஜீ	மூ	தா			
2	மா தா	,, ,, நீ	ஸா ,, ,,	ஸ்ா ,, ,,	த நி ஸா	த நி ஸா	ஸ நி த நி	பா மா
	க ஞ	க	ஜீ	மூ	தா			
3	மா தா	,, ,, நீ	ஸ்ா ,, ,,	ஸா ,, ,,	ரி க ம ா	ரீ ஸா	ஸ நி த நி	பா மா
	க ஞ	க	ஜீ	மூ	தா			
4	மா தா	,, ,, நீ	ஸா ,, ,,	ஸ நி த நி	ஸா ,, ,,	,, ,, தா	நீ ஸ்ா	ரீ கா
	க ஞ	க	ஜீ	மூ	தா	சு	க வ	ன தி
5	மா ,, ,,	,, ,, கா	,, ,, மா	ரி ,, ,,	,, ,, ஸா	,, ,, நீ	தா நீ	ஸா ,, ,,
	க	ம் பீ	ர	நீ	பா	த	மு ல	பை

சரணம்

1	பா மா	தா ,, ,,	,, ,, ,,	மா ,, ,,	தா நீ	,, ,, பா	,, ,, மா	கா மா
	க வி	லோ		மா	ட லு	நே	ர்த்ஸு	கொ கா ணி
2	ரீ ,, ,,	,, ,, கா	மா பா	ரீ கா	மா பா	மா ,, ,,	,, ,, நீ	தா நி
	கா	ந்த	ல னு	த ன	யு ல	ப்ரோ	த்ஸு	ட கு
3	மா தா	,, ,, நீ	ஸா ,, ,,	ஸ் நி த நி	ஸா ,, ,,	,, ,, தா	நீ ஸ்ா	ரீ கா
	சி லா	தமு	டை	ப லு	க	நே	ர	ஞ ர
4	மா ,, ,,	கா	,, ,, மா	ரீ ,, ,,	,, ,, ஸா	,, ,, தா	நீ ஸா	ஸா ,, ,,
	ஸ்ரீ	த்யா	க	ரா	ஜா	ப்த	நீயெ	ட

மே--22.
ஸரிகமதநிஸ
ஸநிதமகரிஸ

கீர்த்தனம் 42

ஸ்ரீரஞ்ஜனி—ரூபகம்.

பல்லவி.

ஸொகஸுகா மிருதங்கதாளமு ஜதகூர்ச்சி,
நின்னு ஸொக்கஜேயு தீருடெவ்வடோ?

அநுபல்லவி.

நிகமசிரோர்த்தமு கல்கின நிஜவாக்குலதோ ஸ்வரசுத்தமுதோ

சரணம்.

யதி விச்ரம ஸத்பக்தி விரதி த்ராக்ஷாரஸ நவரஸயுத
கிருதிசே பஜிஞ்சே யுக்தி த்யாகராஜுனி தரமா? ஸ்ரீராம!

பதவுரை.

ஸ்ரீராம :	—ஸ்ரீராம !
யதி	—யதி,
விச்ரம	—விச்ரமம்,
ஸத்பக்தி	—நிர்மலமான பக்தி
விரதி	—வைராக்யம்
த்ராக்ஷாரஸ	—த்ராக்ஷாபாகம்
நவரஸ	—நவரஸங்கள் முதலியவை
யுத	—பொருந்தின
கிருதிசே	—கீர்த்தனங்களால்
பஜிஞ்சே	—பஜனைசெய்யும்
யுக்தி	—உபாயம்

த்யாகராஜுனி தரமா?	—த்யாகராஜனுக்கு ஸாத்யமா ?
மிருதங்க தாளமு	—மிருதங்கத்தையும் தாளத்தையும்
ஸொகஸுகா	—அழகாய்
ஜதகூர்ச்சி	—ஒத்துமைசெய்துகொண்டு,
நிகம சிரோர்த்தமு கல்கின	—வேதங்களுக்குச் சிரஸைப்போன்ற உபநிஷத்துகளின் அர்த்தங்களடங்கின
நிஜ வாக்குலதோ	—ஸத்யமான வார்த்தைகளாலும்
ஸ்வரசுத்தமுதோ	—ஸ்வரசுத்தமான கானத்தாலும்
நின்னு	—உன்னை
ஸொக்கஜேயு	—மயங்கச்செய்யும்
தீருடு	—தீரன்
எவ்வடோ?	—யாரோ ?

பொழிப்புரை.

ஸ்ரீராம ! யதி விச்ரமம், நிர்மலமான பக்தி வைராக்யம் த்ராக்ஷாபாகம் நவரஸங்கள் முதலியவை பொருந்தின கீர்த்தனங்களால் பஜனைசெய்யும் உபாயம் த்யாகராஜனுக்கு ஸாத்யமா? மிருதங்கத்தையும் தாளத்தையும் அழகாய் ஒத்துமைசெய்து கொண்டு, வேதங்களுக்குச் சிரஸைப் போன்ற உபநிஷத்துகளின் அர்த்தங்களடங்கின ஸத்யமான வார்த்தைகளாலும் ஸ்வர சுத்தமான வார்த்தைகளாலும் உன்னை மயங்கச்செய்யும் தீரன் யாரோ ? (ஒருவருமில்லை).

நோட்டுகள்.

இந்தக் கீர்த்தனத்தில் மிருதங்கமென்ற வாத்யத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஸ்வரராகஸுதா வென்ற கீர்த்தனத்தில் 'மத்தள தாள கதுலு தெலியகனே' யென்ற சரணத்தைப் பார்க்க.

நிகமசிரோர்த்தமு—'ஆனந்தஸாகரமே' யென்ற கீர்த்தனத்தின் அனுபல்லவியில் 'அகில நைகமாசிருத ஸங் தமனு' வென்றதையும் 'எந்தரானி' யென்ற கீர்தனத்தில் 'ஆகமோக்தமகு நீகுணமுல' யென்ற சரணத்தையும் பார்க்க.

யதி விச்ரமம் :—தெலுங்கு பத்யங்களின் அமைப்பில் ஒருவிதமான ப்ராஸம்.

த்ராக்ஷாபாகம் :—லோகத்தில் ஒவ்வொரு வஸ்துக்களின் ரஸத்தை அனுபவிக்கவேண்டுமானல் பாகமில்லாமல் முடியாது. பாகம் ஒருவகையான உஷ்ணத்தின் சேர்க்கையே. மாங்காய் முதலியவைகளை வைக்கோல் முதலியவைகளில் வைத்து உஷ்ணத்தை உண்டுபண்ணினுல், காயிலிருந்த ரஸம் மாறி இனிமையான ரஸம் உண்டாகிறதல்லவா ?

அதைப்போல காவ்யத்தில், சிருங்காரம் முதலிய ரஸங்கள் மனஸுக்கு ஸுகத்தைக் கொடுக்கும்படி வர்ணிக்கப்படுவதான் காம்பீர்யமே பாகமெனப்படும். இது முக்யமாய் இரண்டு வகை :—த்ராக்ஷாபாகம், நாளிகேரபாகம்.

த்ராக்ஷாபாகம் :—த்ராக்ஷாபலம் வாயில் போட்ட மாத்ரத்திலும் கடித்தமாத்ரத்திலும் ரஸத்தைக் கொடுப்பது போலப் படிக்குங்காலத்திலும் அர்த்தானுஸந்தானத்திலும் சிருங்காரம் முதலிய ரஸங்கள் ப்ரகாசிப்பது.

நாளிகேரபாகம் :—தேங்காயின் மட்டையையும் ஓடுகளையும் ச்ரமப்பட்டுப் பிரித்து, உள்ளிருக்கும் கடினமான பருப்பை எடுத்து, அதையும் கடித்த பிறகே அதன் ரஸத்தை அனுபவிப்பதுபோலப், படித்தவுடனே அர்த்தம் வெளிப்படாமல் கொஞ்சம் ச்ரமப்பட்ட பிறகே ரஸத்தைத் தெரிந்துகொள்ளும்படியிருப்பது. த்ராக்ஷாபாகம் மிகவும் லேசானது ; நாளிகேரபாகம் மிகவும் கடினமானது ; இவ்விரண்டிற்கும் நடுவில் மது பாகம் க்ஷீரபாகம் கதளீபாகம் முதலியவையுமுண்டு.

பல்லவி.

1 ரீ தா நீ தா ,, ,, மா கா ,, ,, கா ரீ ,, ,, நீ || ஸா ,, ,, ஸா ,, ,, தா நீ ஸா ,, ,, ரீ கா மா ,, ,,
ஸொ க ஸூ கா மிரு தங் க தா ள || மு ஜ த கூ ர் ச் சி நி னு
2 ரீ தா நீ ரீஸ நிதமா கா ,, ,, கா ரீ ,, ,, நீ || ஸா ,, ,, ஸா ,, ,, தா நீ ஸா ,, ,, ரீ கா மா ,, ,,
ஸொ க ஸூ கா மிரு தங் க தா ள || மு ஜ த கூ ர் ச் சி நி னு
3 தா நீ ,, ,, ஸா ,, ,, நீ தா ,, ,, மா கா ,, ,, கா || ரீ ,, ,, ,, ,, ,, ,, ,, ,, ,, ,, ஸா ,, ,, ,, ,, ,, ,, ,, ,, ,, ,,
ஸொ க் க ஜே யு தீ ரு டெ வ || டோ

அனுபல்லவி.

1 நீ தா நீ ஸ்ா ஸா ,, ,, தா நீ ஸா ,, ,, ஸாஸா || ரீ கா மா ,, ,, ,, ,, ,, ,, கா ரீ கா ,, ,, ,, ,, ,, ,,
நி க ம இ ரோர் த்த மு கல் கி ன || நி ஜ வாக் கு ல தோ
ரீ ஸா நீ ,, ,, ,, ,, ,, ,, கா ரீ ஸா ,, ,, ,, ,, ,, ,,
ஸ் வ ர சு த்த மு தோ
2 நீ தா நீ ஸா ஸா ,, ,, தா நீ ஸா ,, ,, ஸாஸா || ரீ கா மா ,, ,, ரிகமா கா ரீ கா ,, ,, ஸரிகா
நி க ம இ ரோ ர் த்த மு கல் கி ன || நி ஜ வாக் கு ல தோ
ரீ ஸா நீ ,, ,, ஸரிகா கா ரீ ஸா ,, ,, நித மா
ஸ் வ ர சு த்த மு தோ
ஸா நீ தாமா ,, ,, கா ரீ ,, ,, ஸா நீ தா நீ || ஸா ,, ,,
ஸொ க ஸூ கா மிரு தங் க தா ள || மு ஜிதகூர்ச்சி

சரணம்.

1 ரீ கா மா ,, ,, மா மா தா மா மா ,, ,, மா மா || கா கா கரி ரீ ஸா ,, ,, கா கா மா மா மா
ய தி வி ச் ர ம ஸத் பக் தி வி || ர தி த்ரா க்ஷா ர ஸ ந வ ர ஸ
2 [illegible] கா நீ ஸா ஸா ,, ,, நீ தா நீ ஸா ஸா ,, ,, || ரீ ,, ,, தாமா ,, ,, மா கா ,, ,, ரீஸா நீ தா
யு [illegible] க ரு தி சே ப ஜி ஞ் சே || யு க் தி த்யா க ரா ஜூ ணி த ர
3 நீ ,, [illegible] ஸா ,, ,, நிதமா
மா [illegible] ரா ம

கீர்த்தனம் 43.

பூர்ணஷட்ஜம்—தேசாதி.

மே—20.

பல்லவி.

ஸ்ரீமானினீமனோஹர! சிரகாலமு நா மாட யொகடேரா.
வேமாரு பல்கஜாலரா

அநுபல்லவி.

ஸ்ரீமந்துலௌ நீ ஸோதருலு ஜேயுரீதி
பாதஸேவ கோரிதினி

சரணம்.

தர்மாத்யகில புருஷார்த்தமுலு தசார்ஹுனி
ரூபமப்பின பர்மம்பு வேறே யுன்னதி;
மன்னின்த்வு மிக த்யாகராஜனுத!

பதவுரை.

ஸ்ரீமானனீ மனோஹர! —லக்ஷ்மீயின் மனஸை அபஹரிக்கிறவனே!
சிரகாலமு —வெகு காலமாய்
நா, மாட, ஒகடேரா. —நான் சொல்லும் வார்த்தை ஒன்றே.
வேமாரு —அடிக்கடி
பல்கஜாலரா. —உன்னிடத்தில் சொல்ல என்னால் முடியாது.
ஸ்ரீமந்துலௌ நீ ஸோதருலு —லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற உன் ஸஹோதரர்கள்
ஜேயு ரீதி —செய்யும் விதமாய்
பாதஸேவ சேய கோரிதினி —உன் பாதஸேவை செய்ய வேண்டினேன்.
தர்மாதி அகில புருஷார்த்தமுலு —தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்ற ஸகல புருஷார்த்தங்கள்
தாசார்ஹுனி —பத்து அவதாரங்களைச் செய்த ஸ்ரீராமனுடைய

ரூபமு அப்பின	—ரூபத்தில் வந்தடைந்த,
மர்மம்பு, வேறே உன்னதி	—ரஹஸ்யம் வேறேயுண்டு.
த்யாகராஜனுத	—த்யாகராஜனுல் ஸ்தோத்ரஞ்செய்யப்பட்டவனே !
இக மன்னிம்புமு	—இனி என்னை மன்னிக்கவேண்டும்.

பொழிப்புரை.

லக்ஷ்மீயின் மனஸை அபஹரிக்கிறவனே ! வெகுகாலமாய் நான் சொல்லும் வார்தை ஒன்றே. லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற உன் ஸஹோதரர்கள் செய்யும் விதமாய் உன் பாதஸேவை செய்ய வேண்டினேன். தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்ற ஸகல புருஷார்த்தங்கள் பத்து அவதாரங்களைச் செய்த ஸ்ரீராமனுடைய ரூபத்தில் வந்தடைந்த ரஹஸ்யம் வேறேயுண்டு. த்யாகராஜனுல் ஸ்தோத்ரஞ்செய்யப்பட்டவனே ! இனி என்னை மன்னிக்கவேண்டும்.

நோட்டுகள்.

இந்த அவதாரத்தில் மாத்ரம் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்ற நான்கு புருஷார்த்தங்களும் அவரை ஆச்ரயித்திருக்கின்றன. அதாவது, அவருடைய அனுக்ரஹத்தால் இந்நான்கும் கிடைக்கும்.

பாதஸேவ :—'உபகாரமுஜே சேவாரு' 'நே பொகட குண்டே' 'லேகனு' 'உபசாரமுலனு' 'பக்கல நிலபடி' முதலியவைகளைப் பார்க்க.

மர்மம்பு :—ஸ்ரீராமாவதாரமே பூர்ணுவதாரம், அவரே பரப்ரஹ்மம், பத்து அவதாரங்களும் அவருடைய அம்சங்கள். ஜயதேஸ்வாமிகள் செய்த கீதகோவிந்தமென்ற காவ்யத்தில் முதலாவது அஷ்டபதி முடிந்தவுடன் காணப்படும் "வேதானுத்தரதே" யென்ற வந்தனச்லோகத்தில் "தசாக்ருதிக்ருதே க்ருஷ்ணுய துப்யம் நம:—மேற்சொன்ன பத்து அவதாரங்களையுமெடுத்த க்ருஷ்ணனுக்கு நமஸ்கார" மென்று சொல்லப்பட்டிருக்கிறது. பூர்ணுவதார மெடுத்தவர் ராமனு க்ருஷ்ணனுவென்ற வாதம் வெகு காலமாயுண்டு.

புருஷார்த்தங்களுடைய விவரணம் :—"தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்றவைகளை உபதேசிப்பதாயும், முந்தி நடந்த சரித்ரத்தோடு கூடினதாயுமிருப்பதே இதிஹாஸ" மென்று சப்தஸ்தோமத்தில் சொல்லப்படுகிறது. இந்த லக்ஷணங்களோடு கூடிய இதிஹாஸங்கள், வால்மீகிமஹர்ஷியால் வெளிப்படுத்தப்பட்ட ராமாயணம், வேதவ்யாஸமஹர்ஷியால் வெளிப்படுத்தப்பட்ட மஹாபாரதம், கர்க்காசார்யரால் வெளிப்படுத்தப்பட்ட கர்க்கஸம்ஹிதைகளே. பூர்வகண்டம் உத்தரகண்டமென ராமாயணம் இருவகைப்படும். இவை ஸ்ரீவால்மீகிமஹர்ஷியால் செய்யப்பட்டன. விஷ்ணுவின் அம்சத்தால் அவதாரஞ்செய்த

ஸ்ரீராமனுடைய சரித்ரம் பூர்வகண்டம். ப்ரஹ்மபுத்ரரான வஸிஷ்டமஹர்ஷியால், ஆத்மதத்வோபதேசமாகிற வேதாந்த ஸாரத்தை ஸ்ரீராமனுக்குத் திரட்டிச் சொன்னதை பரத்வாஜருக்கு வால்மீகி உபதேசித்தது உத்தரகண்டம். பூர்வகண்டத்தில் தர்மார்த்த காமமோக்ஷங்களாகிற நான்கு புருஷார்த்தங்களில் முதல் மூன்றும் நன்றாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளில் மனிதன் தனக்கு இயல்பானதும் ந்யாயமானதும் சாஸ்த்ரவிரோதமில்லாததுமான கார்யங்களை அனுஷ்டித்தல் தர்மம். அர்த்தமென்பது--பொருள் அல்லது ப்ரயோஜனம்; காமமென்பது—விருப்பம் அல்லது ஆசை; இவைகளில் ஒவ்வொன்றின் ஸ்வரூபத்தையும் விளக்கிக்காட்டியிருக்கிறார்.

பிதாவின் கட்டளை ந்யாயமானாலும் அந்யாயமானாலும் அதை யோசிக்காமல், அதனால் துக்கம் முதலியவை உண்டாவதாயிருந்தாலும், அதை நிறைவேற்றுவது புத்ரனுடை கடமையென்ற தர்மம், பிதிருவாக்யபரிபாலனஞ்செய்ய ராமன் காட்டிற்குச் சென்றதாலும்; ஸஹோதரர்கள் ஒருவர்க்கொருவர் இருக்கவேண்டிய அன்பும் ஜ்யேஷ்ட ஸஹோதரனிடத்தில் மற்ற ஸஹோதரர்கள் நடந்துகொள்ளவேண்டிய க்ரமும் லக்ஷ்மண பரத சத்ருக்னர்களுக்கும் ராமனுக்கும் நடந்த சரித்ரத்தாலும்; ஸ்த்ரீகள் புருஷனை விட்டுத் தனியேயிருக்கலாகாது, புருஷனுக்கு எப்படிப்பட்ட துன்பம் நேரிட்டாலும் அதை மனைவியும் கூடவிருந்து அனுபவித்துக்கொண்டு புருஷனுக்குச் சுச்ரூஷைசெய்வது ஸ்த்ரீகளுடைய கடமையென்ற தர்மம், ஸீதையைக் காட்டிற்கழைத்துப்போனதாலும்; ரிஷிகள் தபஸ்விகள் முதலியவர்களுக்குத் துன்பமுண்டாகாமல் ரக்ஷிக்கவேண்டியது க்ஷத்ரியதர்மமென்பது, விராதன் முதலிய ராக்ஷஸர்களை ராமன் வதஞ்செய்து ரிஷிகளுக்கு ப்ரியமுண்டாக்கினதாலும்; சக்ரவர்த்தியாயிருந்தாலும் மஹர்ஷிகள் முதலிய பெரியோர்களை வணங்குவது தர்மமென்பது, ரிஷிகளை ராமன் வணங்கி உபசரித்தாலும்; ஸாதுக்களுக்கும் தர்மங்களுக்கும் கெடுதிசெய்கிறவன் எவ்வளவு பலவானானாலும் ஸைன்யமுள்ளவனானாலும் அவன் புத்ரமித்ராதிகளுடன் நசித்துப்போவானென்கிற நீதி, ராவணாதிகளுடைய வதத்தால் வெளியிடப்பட்டது. இவை மாத்ரமல்ல; பின்னும் அநேக தர்மங்கள் லோகத்திற்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

தர்மத்தைவிட அர்த்தம் அல்பமென்பதை ராமன் ராஜ்ய ஐச்வர்யத்தை இழந்து காட்டுக்குச் சென்றதாலும்; யாராவது தனக்கு அல்பமேனும் உபகாரஞ்செய்திருந்தால் அதற்குப் ரதிப்ரயோஜனம் தன்னால் கூடியவரையில் செய்யவேண்டியது கடமையென்பதை, ஜடாயுவிற்கு ஸம்ஸ்காரஞ்செய்து அவர் நற்கதியடையும்படி அனுக்ரஹித்ததாலும்; தான் வ்யஸனமடைந்து ஸீதையைத் தேடி அலையுங்காலத்தில் தன்னை ஆதரித்து ஸீதையின் ஆபரணத்தைக் கொடுத்து அவள் ஜீவித்திருக்கிறாளென்று தனக்கு தைர்யத்தையுண்டாக்கின ஸுக்ரீவனுக்கு ப்ரதிப்ரயோஜனமாக ராஜ்யாதிபத்யத்தைக் கொடுத்தாலும்; துக்கத்தால் மனவருத்தமடைந்து தன்னைச் சரணமடைந்த விபீஷணனுக்குச் சிரஞ்ஜீவிப்பட்டத்தையும் ராஜ்யத்தையும் கொடுத்ததாலும் வெளியிட்டார்.

காமம், ந்யாயவிரோதமாயும் அக்ரமமாயுமிருந்தால் அதனால் தனக்கே நாசமுண்டாகும்மென்றே விஷயத்தைக், கைகேயி யிடத்திலுள்ள காமத்தால் தசரதர் ஜ்யேஷ்ட புத்ரனைக் காட்டிற் கனுப்பினதாலும்; ஸீதையின் வார்த்தையால் ராமன் மானைப் பின்தொடர்ந்ததால் ஸீதையைப் பறிகொடுத்துத் துன்பமடைந்ததாலும்; ஸஹோதரனுடைய பார்யையை அபஹரித்ததால் வாலி மரணமடைந்ததாலும்; ஸீதையைப் பலவந்தஞ்செய்து ராவணன் அழிந்ததாலும் காமஸ்வரூபம் வெளியிடப்பட்டது.

ஆனால் பூர்வகண்டத்தில் மோக்ஷஸாதனமான சில சரித்ரங்களைச் சொல்லியிருந்தாலும், மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனயான யோகம் ஞானம் ப்ரஹ்மஸ்வரூபலக்ஷணம் மோக்ஷஸ்வரூபம் இவைகளை நன்றாய் விளக்கவில்லை. ஏனென்றால், அவ்விஷயங்கள் உத்தரகண்டத்தில் பூர்ணமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. பூர்வகண்டம் குசலவர்களென்ற பாலர்களுக்கு உபதேசிக்கப்பட்டதால் அதில் ஆத்மதத்வம் பூர்ணமாய்ச் சொல்லப்படவில்லை. இது ஆறு கண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டு, 24,000 க்ரந்தங்கள் அடங்கியிருக்கின்றன. ஆறாவது காண்டத்தில் பூர்வகண்டம் உத்தரகண்டமென்ன இரண்டு பிரிவுகளுண்டு; உத்தரகண்டத்தில் மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனமான ஆத்மதத்வமாகிற ப்ரஹ்மஸ்வரூபம் வஸிஷ்டமஹர்ஷியால் ராமனுக்கு நன்றாய் உபதேசிக்கப்படுகிறது. இதையே பரத்வாஜருக்கு வால்மீகிமஹர்ஷி உபதேசித்தார். 32,000 க்ரந்தங்களடங்கிய ஆறு காண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது; கடைக்காண்டம், பூர்வம் உத்தரமென்றே இரண்டு பிரிவாயிருக்கிறது. இதில் ஆத்மதத்வஞானம் பூர்ணமாய் உபதேசிக்கப்பட்டிருக்கிறபடியால், இதற்கு ஞானவாஸிஷ்ட ராமாயணமென்றும், யோகத்தை விரித்துரைத்திருக்கிறபடியால் யோகவாஸிஷ்ட ராமாயணமென்றும் பெயர்களுண்டாயின. இதை இப்புராணங்களிலொன்றாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். அதற்கு யாதொரு ஆதாரமுமில்லை.

	தள்ளிஎடுப்பு.		பல்லவி.							
1			ரீ	கா	மா	,, ,, கா	ரீ ,, ,,	,, ,, ஸா	நீ கா	ரீ கா
			ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
2	மா ,, ,,	,, ,,	ரீ	கா	மா	,, ,, கா	மககரி	ரிஸஸா	நீ கா	ரீ கா
	ரா		ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
3	மா ,, ,,	,, ,,	ரிக	மா	ரிக	மக கா	மககரி	ரிஸஸா	நீ கா	ரீ கா
	ரா		ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
4	மா ,, ,,	,, ,,	ரிக	மா	ரிக	மக கா	மககரி	ரிஸஸநி	ஸா கா	ரீ கா
	ரா		ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
5	மா நீ	,, ,,	ஸநி	பம	ரிக	மா ரீ	மககரி	ரிஸஸநி	ஸா கா	ரீ கா
	ரா		ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
6	மா நீ	,, ,,	ஸநி	பம	ரிக	மா கா	மககரி	ரிஸஸரி	ஸா கா	ரீ கா
	ரா		ஶ்ரீ		மா	ன	ணி	ம	ஞே	ஹ
7	மா ,, ,,	,, ,,	கா	ரீ	ஸா	,, ,, நீ	பா மா	,, ,, நீ	,, ,, நீ	நீ ஸா
	ரா		ஜி	ர	கா	ல	மு ன	மா	ட	பொ க
8	ரிகமக	நிஸ								
	டெ ர									
9			நீ	நீ	ஸா	,, ,, நீ		,, ,, மா	,, ,, நீ	நீ நீ
			வே		மா	ஞு	பா ,, ,,	ல்க	க	ல
							ப			
10	ஸா ,, ,,	,, ,,								
	ரா									

அனுபல்லவி.

1			நீ	நீ	ஸா	,, ,, கா	ரீ ,, ,,	,, ,, நீ	காமா	,, ,, கா
			ஶ்ரீ		ம	ந்து	லு	நீ	ஸோ	த
2	ரீ ஸா	,, ,,	ரிஸ	நீ	ஸா	கா	ரீ ,, ,,	,, ,, ரிக	மா ரிக	மா கா
	ரு லு		ஶ்ரீ		மந்	து	லு	நீ	ஸோ	த
3	ரீ க ரி	ஸஸ	ஸா	நீ	பா	,, ,, மா	நீ ,, ஸநி	நீ ஸ நி	பா மா	,, ,, ரீ
	ரு லு		சே	யு	ரீ	தி	பாத	ஸே	வ. கோ	ரி
4	கா ரீ	,, ,,								
	தி ணி									

சரணம்.

1			பா	,, ,,	பா	,, ,, மா	நீ நீ	ஸநிபா	மா ,, ,,	ரீ கா
			த		ர்மா	ர்த்த	கி ல	பு ரு	ஷா	ர்த்த மு
2	ரீ ,, ,,	,, ,,	ம க	மா	நீ	,, ,, பம	மககரி	ரி ஸ நீ	ஸா ரிக	மா கா
	லு		த		சா	ர்க்க	நீ	ரு	பா ம	மா
3	மா ,, ,,	,, ,,	நீ	,, ,,	ஸா	,, ,, ரீ	ரீ ,, ,,	,, ,, ரீ	கா மா	,, ,, கா
	நா		மா		மா	ம்பு	வெ	லெ	யு	ண
4	ரீ ,, ,,	,, ,,	ஸா	நீ	பா	,, ,, மா	நீ நீ	,, ,, ஸநி	பா மா	,, ,, ரீ
	தி		ம		நதி	ஸூ	மி கா	த்யா	க ரா	ஜ
5	கா ரீ	,, ,,								
	ஞு தா									

மே—20.
{ ஸரிகமநிதபஸ
{ ஸநிதபமகரிஸ

கீர்த்தனம் 44.

ஜிங்கலா—ஆதி.

பல்லவி.

அநாதுடனு காநு! ராம! நேனு

அனுபல்லவி.

அநாதுடவு நீவனி நிகமஜ்ஞுல
ஸஜ்ஜனுல மாட விந்நானு நேனு

சரணம்.

நிராதரவு ஜூசி, ஈ கலி நராதமுலனேரு
புராணபுருஷ! புராரிபுநுத!
நாகராட்சயன! த்யாகராஜநுத! நேனு.

பதவுரை.

புராணபுருஷ, புராரிபுநுத, நாகராட்சயன, த்யாகராஜநுத	—ஆதிபுருஷ! த்ரிபுரத்தை எரித்த பரமசிவனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே! ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டவனே! த்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே!
நிராதரவு ஜூசி	—நீ என்னிடத்தில் ஆதரவுசெய்யாமலிருப்பதைப்பார்த்து,
ஈ கலிநராதமுலு அனேரு.	—இந்தக் கலியுகத்திலுள்ள அல்ப மனிதர்கள் "நீ அநாதை" என்று என்னைச் சொன்னார்கள்.
நேனு அநாதுடனு காநு.	—(ஆனால்)நான் அனாதையல்ல;
நீவு அநாதுடவு அனி	—நீ அனாதையென்று
நிகமஜ்ஞுல ஸஜ்ஜனுல மாட விந்நானு நேனு	—வேதங்களில் கரைகண்ட முன்னிருந்த பெரியோர்களின் வார்த்தையைக் கேட்டிருக்கிறேன்

பொழிப்புரை.

ஆதிபுருஷ! த்ரிபுரத்தை எரித்த பரமசிவனால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனே! ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டவனே! த்யாரகராஜனால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனே! நீ என்னிடத்தில் ஆதரவு செய்யாமலிருப்பதைப் பார்த்து, இந்தக் கலியுகத்திலுள்ள அல்ப மனிதர்கள் "நீ அநாதை" என்று என்னைச்சொன்னார்கள். (ஆனால்) நான் அனாதையல்ல; நீயே அனாதையென்று வேதங்களில் கரைகண்ட முன்னிருந்த பெரியோர்களின் வார்த்தையைக் கேட்டிருக்கிறேன்.

நோட்டேஸ்.

ராம! உன் தயவு என்னிடத்தில் இல்லாததைக் கண்டு அல்பமனிதர்கள் "நீ அநாதை" யென்று என்னைச் சொன்னார்கள். அநாதையென்றால் 'நாதன், காப்பாற்றுகிறவன் இல்லாதவன்.' நீ எனக்கு ப்ரபுவாயும் நாதனுயுமிருக்கும்பொழுது நான் எப்படி அநாதையாவேன்? அநாதையென்றால் நீயே. உனக்கு நாதனில்லை. "ஒப்பாரும் மிக்காருமில்லாதானை" யென்று ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். "நதத்ஸம ஸ்சாப்யதிகோஹி திருச்யதே, அவனுக்கு ஸமானனும் மேலானவனுமில்லை யென்று" வேதம் சொல்லுகிறது.

பல்லவி.

1	பா ஸா	,, ,, நீ	தா பா	மா கா	ரீ ,, ,,	,, ,, ரீ	கா மா	நி நி த த
	அ நா	து	ட னு	கா	னு	ரா	ம	நே
2	பா ஸரி	க ரி ரி ஸ	நீ த ப	ம ப ம க	ரீ ,, ,,	,, ,, ரீ	கா மா	நி நி த த
	அ நா	து	ட னு	கா	னு	ரா	ம	நே

அனுபல்லவி.

1	பா ஸா	,, ,, ரீ	ரீ ரீ	ஸ ரி க ரி	கா ஸ க	ரி க மா	ம க கா	ரீ ரீ
	அ நா	து	ட வு	நீ	வ னி	நி க	ம	க்ஞு ல
2	ஸா நீ	,, ,, தா	பா மா	கா ,, ,,	ரீ ,, ,,	நி த	ப ம க ம	நி நி த த
	ஸ நா	த	னு ல	மா	ட	வின்	ஞ	நே

சரணம்.

1	பா பா	,, ,, தா	நீ தா	ப ம கா	ரீ ,, ,,	,, ,, ரீ	சா மா	நி நி த த
	நி ரா	த	ர வு	ஜூ	சி	ஈ	க	லி
2	பா ஸா	,, ,, நீ	தா பா	ப ம கா	ரீ ,, ,,	,, ,, ரீ	ஸா ,, ,,	ஸா ,, ,,
	ந ரா	த	மு ல	னே	ரு			
3	பா ஸா	,, ,, ரீ	ரீ ரீ	ஸ ரி க ரி	கா ஸ க	ரி க மா	ம க் கா	ரீ ,, ,,
	பு ரா	ண	பு ரு	ஷ	பு ர	ஹ ர	நு த	நா
4	ஸா நீ	,, ,, தா	பா மா	கா ,, ,,	ரீ ரீ	நி த ப ம	க ரி க ம	நி நி த தீ
	க ராட்	ச	ய ன	த்யா	க	ரா ஜ	நு த	நே

கீர்த்தனம் 45.

கல்யாணி—ரூபகம்.

பல்லவி.

பஜனசேயவே மனஸா ! பரமபக்திதோ

அனுபல்லவி.

அஜருத்ராதுலகு பூஸுராதுல கருதைன ராம

சரணம்.

நாத ப்ரணவ ஸப்தஸ்வர வேதவர்ண சாஸ்த்ர
புராணாதி சதுஷ் ஷஷ்டி கலல பேதமு கலிகே.
யோதகர சரீரமெத்தி முக்திமார்க்கமுனு தெலியக
வாததர்க்கமேல? ஸ்ரீமதாதி த்யாகராஜ நுதுனி.

பதவுரை.

மனஸா	—மனஸே !
அஜ ருத்ராதுலகு	—ப்ரஹ்மா ருத்ரன் முதலானவர்களுக்கும்
பூஸுராதுலகு	—ப்ராஹ்மணோத்தமர்கள் முதலானவர்களுக்கும்
அருதைன	—கிடைக்காத
ராமபஜன	—ராமனுடைய பஜனையை
பரமபக்திதோ	—எல்லையற்ற பக்தியுடன்
சேயவே.	—செய்.
நாத	—நாதம்
ப்ரணவ	—ப்ரணவம்
ஸப்தஸ்வர	—ஏழு ஸ்வரங்கள்
வேதவர்ண	—வேதங்களின் அக்ஷர ராசிகள்

சாஸ்த்ர	—சாஸ்த்ரங்கள்
புராணுதி	—புராணங்கள் முதலிய
சதுஷ் ஷஷ்டி கலல	—அறுபத்து நான்கு கலைகளின்
பேதமு	—பேதங்கள்
கலிகே.	—உண்டாயிருக்கின்றன.
மோதகர	—ஆனந்தத்தைக் கொடுக்கும்
சரீரமு எத்தி	—சரீரத்தை எடுத்து
முக்தி மார்க்கமுனு	—மோக்ஷத்தையடையும் மார்க்கத்தை
தெலியக,	—அறியாமல்
வாததர்க்கமு ஏல ?	—வீண் சண்டைபோடும் தர்க்கசாஸ்த்ரங்களால் என்ன ப்ரயோஜனம் ?
ஸ்ரீமதாதி த்யாகராஜனுதுனி	—லக்ஷ்மீஸமேதனுயிருப்பது முதலிய அனந்தகல்யாணகுணங்கள் பொருந்தினவனும் த்யாகராஜனுல் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனுமான · ராமனுடைய (பஜனையைச் செய்).

பொழிப்புரை.

மனஸே ! நாதம், ப்ரணவம், ஏழு ஸ்வரங்கள், வேதங்களின் அக்ஷரராசிகள், சாஸ்த்ரங்கள், புராணங்கள் முதலிய அறுபத்து நான்கு கலைகளின் பேதங்கள் உண்டாயிருக்கின்றன. ஆனந்தத்தைக் கொடுக்கும் சரீரத்தை எடுத்து, மோக்ஷத்தையடையும் மார்க்கத்தை அறியாமல், வீண் சண்டைபோடும் தர்க்கசாஸ்த்ரங்களால் என்ன ப்ரயோஜனம்? ப்ரஹ்மா ருத்ரன் முதலானவர்களுக்கும் ப்ராஹ்மணோத்தமர்கள் முதலானவர்களுக்கும் கிடைக்காதவனும், லக்ஷ்மீஸமேதனுயிருப்பது முதலிய அனந்த கல்யாணகுணங்கள் பொருந்தினவனும், த்யாகராஜனுல் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனுமான ராமனுடைய பஜனையை எல்லையற்ற பக்தியுடன் செய்.

நோட்டுகள்.

நாத :—பகவானுடைய ஸ்வரூபமான நாதம். 'நாததனும் அனிசம்' என்ற கீர்த்தனத்தைப் பார்க்க.

ப்ரணவ :—அகார உகார மகார, அர்த்தமர்த்ரா நாத பிந்து கலாவென்ற ஏழு மாத்ரைகளுள்ள ப்ரணவம்.

ஸப்தஸ்வர :—ஸரிகமபதநியென்ற ஏழு ஸ்வரங்கள். ('நாததநும் அனிசம்' "மோக்ஷமு கலதா" வென்ற கீர்த்தனங்களின் சரணங்களைப் பார்க்க.

வேதவர்ண :—அவை ரிக், யஜுஸ், ஸாமமென்று நான்கு; ஒவ்வொன்றும் ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத்தென்று நான்கு உட்பிரிவுகளுள்ளது. யாகங்களில் தேவதைகளைக் குறித்துச் செய்யப்படும் ஸ்தோத்ரரூபமான மந்த்ரங்கள் ஸம்ஹிதையிலும், அவைகளைப் பற்றின பூர்வகதைகளும் விருத்தாந்தங்களும் ப்ராஹ்மணத்திலும், வானப்ரஸ்தர்கள் ஆரண்யங்களில் நியமத்துடன் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் ஆரண்யகத்திலும், ஸந்யாஸிகளுக்கு உபயோகமான ப்ரஹ்மவித்யை உபநிஷத்திலும் சொல்லப்படுகிறது.

உபவேதங்கள் :—(1) ஆயுர்வேதம் (வைத்யசாஸ்த்ரம்); (2) காந்தர்வ வேதம், (கானத்தையும் ந்ருத்யத்தையும் வாத்யங்களையும் பற்றியது); (3) தனுர்வேதம் (ஆயுதங்கள் அஸ்த்ரசஸ்த்ரங்கள் யுத்த விதிகள் க்ரமங்கள் முதலியவைகளைப்பற்றினது); (4) அர்த்தசாஸ்த்ரம் (ராஜ்ய தந்த்ரத்தைப்பற்றினது).

வேதாங்கங்கள்.—சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பமென்று அறுவகை; அவற்றுள் (1) சிக்ஷை; இதற்குப் பாணினி கர்த்தா; இதில் வேதசப்தங்களிலுள்ள அக்ஷரங்களின் ஸ்தானஞானமும், உதாத்தானுதாத்ஸ்வரித ஸ்வரங்களின் ஞானமும் சொல்லப்படும். வ்யாஸர் பரத்வாஜர் நாரதரென்றவர்கள் செய்த சிக்ஷைகளுமுண்டு.

(2) வ்யாகரணம்—இதற்குப் பாணினி கர்த்தா, காத்யாயனரும் பதஞ்சலியும் வ்யாக்யானஞ்செய்திருக்கிறார்கள். இதில் வேதசப்தங்களின் ப்ரகிருதி ப்ரத்யயஞானம் விஸ்தரிக்கப்படுகிறது. பாணினி செய்த வ்யாகரணத்தைத் தவிர மற்ற வ்யாகரணங்கள் வேதாங்கமாக அங்கீகரிக்கப்படமாட்டாது. அவை புராணங்களுக்கு உபயோகப்படும்.

(3) சந்தஸ்—இதற்கு பிங்களமுனி கர்த்தா. வேதத்தில் சொல்லப்பட்ட காயத்ரி முதலிய சந்தஸ்களின் ஞானத்தை உபதேசிக்கும்.

(4) நிருக்தம்—இதற்கு யாஸ்கமுனி கர்த்தா; இதில் வேதமந்த்ரங்களின் ப்ரயோஜனத்தை விளக்கும்பொருட்டு, ப்ரஸித்தியில்லாத பதங்களுடைய அர்த்தங்களும் வேதசப்தங்களுக்கு நிகண்டுவும் அடங்கியிருக்கின்றன. சாகபூர்ணியென்பவரும் நிருக்தம் செய்திருக்கிறார். இது பதகாண்டம் அர்த்தகாண்டமென்று இருவகை.

(5) ஜ்யோதிஷம்—இதற்கு ஆதித்யன் முதலானோர் கர்த்தாக்கள். இதில் வைதிககர்மங்களைத் தொடங்கவேண்டிய கால ஞானமும் பலமும் வருங்காலநடக்கைகளும் விவரிக்கப்படும். ஸூர்யஸித்தாந்தம் முதலிய ஜ்யோதிஷநூல்கள் கணக்கற்றவை.

(6) கல்பம்—இதற்கு ஆச்வலாயனர் காத்யாயனர் ஆபஸ்தம்பர் போதாயனர் த்ராஹ்யாயனர் ஹிரண்யகேசி பரத்வாஜர் ஸத்யாஷாடர் வைகானஸர் முதலானோர் கர்த்தாக்கள். கல்பஸூத்ரங்கள் வேதங்களில் உபதேசிக்கப்பட்ட யக்ஞ கர்மங்களை அனுஷ்டிக்கும் முறையைப் போதிக்கும்.

சாஸ்த்ரம்.	பெயர்.	கர்த்தா.
	யோகம்	பதஞ்சலி
	ஸாங்க்யம்	கபிலர்
	ந்யாயம்	கௌதமர்
	வைசேஷிகம்	காணாதர்
	கர்மமீமாம்ஸா	ஜைமினி
	ப்ரஹ்மமீமாம்ஸா	கிருஷ்ணத்வைபாயனர்

புராணங்கள்—ப்ரஹ்ம, பத்ம, விஷ்ணு, சைவ, பாகவத, பவிஷ்ய, நாரதீய, மார்க்கண்டேய, அக்னி, ப்ரஹ்மகைவர்த்த லிங்க, வராஹ, மத்ஸ்ய, கூர்ம, கருட, ப்ரஹ்மாண்டமென்ற புராணங்கள் பதினெட்டும் மஹாபுராணங்கள். ஆதித்ய, ஸ்காந்த ஸோம, கபில, கௌசிக, ஸாம்ப, சிவதர்ம, தௌர்வாஸ, நாரஸிம்ஹ, நாரதீய, பராசரீய, பார்க்கவ, ப்ரஹ்மாண்ட, மாரீச, மானவ, வாஸிஷ்ட, வாயவ்ய, வாருணமென்றவை உபபுராணங்கள்.

அறுபத்து நான்கு கலைகள்:—(1) நவரஸங்களையும் பாவங்களையும் அங்கசேஷ்டைகளால் வெளிப்படுத்தும் நர்த்தனம், (2) நானாவாத்யங்களின் குணதோஷங்களிலும் அவைகளை வாசிப்பதிலும் பயிற்சி, (3) ஸ்த்ரீபுருஷர்களுக்கு வஸ்த்ரங்களாலும் பூஷணங்களாலும் அலங்கரிப்பது, (4) நானாரூபங்களின் லக்ஷணங்களையும் மாறுதல்களையும் அறிவது, (5) படுக்கைகளை அலங்கரிப்பது, (6) விரிப்புகளை விரித்துப் புஷ்பமாலைகளைக் கட்டுவது, (7) சூது சொக்கட்டான் முதலிய விளையாட்டுகளால் காலங்கழிப்பது, (8) வாத்ஸ்யாயனதந்த்ரப்படி ரதிகேளியின் ரஹஸ்யங்களை அறிந்து அனுபவிப்பது, (9) தேன் மத்யம் முதலிய பானங்களை இறக்கிச் சேர்த்துக் கூட்டுவது, (10) அம்பு முதலிய ஆயுதங்களைத் தேஹத்திலிருந்தெடுப்பது, (11) காயங்களை ஆற்றுவது, (12) பலவித ரஸங்களைக் கலப்பது, (13) அன்னங்களைப் பக்வஞ்செய்வது, (14) மரங்களை விதம்விதமாய்ப் புஷ்பிக்கும்படிக்கும் பழுக்கும்படிக்கும் சிகித்ஸைசெய்து வளர்ப்பது, (15) கருங்கல் முதலிய தாதுக்களை உடைப்பது, (16) பொடியாக்குவது, (17) கருப்பஞ்சாற்றிலிருந்து பலவிதமான பானங்களையும் வஸ்துக்களையும் செய்வது, (18) ஒஷதிகளையும் மருந்துச் சரக்குகளையும் கலப்பது, (19) சரக்குகளைச் சேர்த்துப் பிரிப்பது, (20) பதார்த்தங்களைச் சேர்ப்பதற்கு முன், அவைகளை உபயோகிக்கும் திறமை, (21) பதார்த்தங்களிலிருந்து உப்புகளை எடுப்பது, (22) சரங்களைத் தொடுத்து விடுப்பது, (23) அடிவரிசைகளைப் போடுவது, (24) மல்லயுத்தம், (25) குறிப்பிட்ட விடத்தில் யந்த்ரங்களையும் அஸ்த்ரங்களையும் ப்ரயோகிப்பது,

(26) ரணவாத்யங்களுக்கு ஒத்துப் படைகளை அணிவகுப்பது, (27) யானை குதிரை ரதங்கள் முதலியவைகளை நடத்தி யுத்தஞ் செய்வது, (28) பலவித ஆஸனங்களாலும் முத்ரைகளாலும் தேவதைகளைத் திருப்திசெய்வது, (29) ரதமோட்டுவது, யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளுக்கு நடை பழக்குவது, (30) மண் மரம் கல் முதலியவைகளால் பாத்ரங்களைச் செய்வது, (31) சித்ரமெழுதுவது, (32) தடாகம் ஓடை அரண்மனை முதலியவைகளை அமைப்பது, (33) ஏற்றம் முதலிய யந்த்ரங்களையும் வாத்யங்களையும் செய்வது (34) நாஞு வர்ணங்களை அழகாய்க் கலப்பது, (35) ஜலம் வாயு அக்னி முதலியவைகளைச் சேர்ப்பது, தடுப்பது, (36) படகு கப்பல் ரதம் முதலிய வாஹனங்களைச் செய்வது, (37) நூல்கயிறு முதலியவைகளைச் செய்வது, (38) நெசவு, (39) ரத்னங்களைப் பரீக்ஷிப்பது, அவைகளுக்குத் துளையிடுவது, (40) தங்கம் முதலிய உலோகங்களின் நிஜஸ்வரூபத்தை அறிவது, (41) தங்கம் ரத்னம் முதலியவைகளைப்போல் உண்டுபண்ணுவது. (42) தங்கத்தால் அலங்கரிப்பது, (43) முலாம் பூசுவது, (44) தோல்களைப் பதனிடுவது, (45) மிருகங்களின் தோல்களையும் அங்கங்களையுமெடுப்பது, (46) பால் கறப்பது, கடைவது; (47) ரவிக்கை பாவாடை சட்டை முதலியவைகளைத் தைப்பது, (48) கைகளால் ஆறு குளம் முதலியவைகளை நீந்திக் கடப்பது, (49) வீடுகளையும் பாத்ரங்களையும் சுத்திசெய்வது, (50) வஸ்த்ரங்களை அழுக்கெடுப்பது, (51) க்ஷௌரஞ்செய்வது, (52) எள்மாம்ஸம் முதலியவைகளி லிருந்து தைலம் இறக்குவது, (53) பிறருடைய மனவின்படி நடந்து அவர்களை வசப்படுத்துவது, (54) பூமியை உழுவது, (55) மரங்களிலேறுவது, (56) மூங்கில் புல் முதலியவைகளால் பாத்ரங்களைச் செய்வது, (57) கண்ணுடி பீங்கான் முதலியவைகளால் பாத்ரங்களைச்செய்வது, (58) ஜலத்தை இழுப்பது; தெளிப்பது, (59) அஸ்த்ரங்கள் ஆயுதங்கள் யந்த்ரங்கள் முதலியவைகளைச் செய்வது, (60) யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளுக்கு ஜேணங்களைச் செய்வது, (61) குழந்தைகளை வளர்ப்பது, சிகித்ஸைசெய்வது, விளையாட்டுப் பழக்குவது, (62) அபராதிகளை யுக்தமாய் அடித்துத் தண்டிப்பது, (63) அநேக தேச பாஷைகளை அழகாய் எழுதுவது, (64) தாம்பூலத்தைத் தயார்செய்வது; காப்பாற்றுவது முதலியவை கலைகள்.

வாத தர்க்கமேல :—"கடோ வா மிருத்பிண்டோ வாப்யணுரபி ச தூமோக்னிரசல ||
படோவா தந்துர்வா பரிஹரதி கிம் கோர சமனம்?
விருதா கண்டக்ஷோபம் வஹஸி தர ஸா தர்க்கவசஸா,
பதாம்போஜம் சம்போர்பஜ பரம ஸௌக்யம் வ்ரஜ ஸுதீ: ||

"புத்திமானே! கடம் மண்ணுருண்டை பரமாணு புகை நெருப்பு மலை வஸ்த்ரம் நூல் இவைகளில் யாதொன்ருவது கோரமான யமபாதையைத் தடுக்கமுடியுமா? மேற்சொன்ன வார்த்தைகளை உபயோகிக்கும் வாக்யங்களையுடைய தர்க்க சாஸ்த்ர வாதங்களால் வீணுய்த் தொண்டை வற்றிப்போகும்படி ஏன் கூச்சல் போடுகிருய்? பரமசிவனுடைய சரணுரவிந்தங்களைப் பஜனைசெய். பரமானந்தத்தை அடை."—சிவாநந்தலஹரி 6.

ஸமஎடுப்பு.

பல்லவி.

				‖			
1	கா மா	பா தா	,, ,, நீ	‖	ஸா ,, ,,	,, ,, நித	ப ம க ரி
	ப ஜ	ன சே	ய	‖	வே	ம	ன ஸா
2	கா மா	பா த நி	<u>த நி</u> ஸ நி த	‖	த நி <u>த நி</u> ஸ	ஸா நித	ப ம க ரி
	ப ஜ	ன சே	ய	‖	வே	ம	ன ஸா
3	கா மா	பா நீ	தா நீ	‖	ரீ ,, ,,	ஸா ,, நித	ப ம க ரி
	ப ஜ	ன சே	ய	‖	வே	ம	ன ஸா
4	கா மா	பா த நி	ஸ ரி ஸ நி	‖	ப ந நி ஸ	ரி ஸ நித	ப ம க ரி
	ட ஜ	ன சே	ய	‖	வே	ம	ன ஸா
5	கா மா	பா த நி	ஸ ரி க ம்	‖	க ரி ஸ நி	தப நித	ப ம க ரி
	ப ஜ	ன சே	ய	‖	வே	ம	ன ஸா
6	நீ ரீ	ரீ க க	த த பா	‖	ரீ ,, ,,	க ம ப த	நி த ப ம
	ப ர	ம ப	க் தி	‖	தோ		

அனுபல்லவி.

				‖			
1	நி நீ தா	ப த ப ம	கம பத	‖	நீ தா	பா கா	,, ,, ரீ
	அ ஜ	ரு	த்ரா	‖	தி ல	கு பூ	ஸ ஃ
2	நி ஸ ரீ	கம பத	த நி ஸ ரி	‖	க ரி ஸ நி	த ா ப ம	க ப ம ரி
	ரா	து ல	க ரு	‖	தை	ண	ரா ம

சரணம்.

				‖			
1	பா ம க	ம ப கா	த ா ப ப	‖	நி நி த நி	த ப பா	ம க ரீ
	நா த ப்ர	ணவ ஸ	ப் த ஸ்வ ர	‖	வே த வ	ணர்சா	ஸ்தர பு ரா
2	ரீ ஸ க	ரீ கா	க ப ம ரி	‖	கக ம க	ரி ஸ ரீ	,, ,, ஸா
	ஞ தி ச	து ஷ	ஷ் டி க ல ஃ	‖	பே த மு	க வி கே	
3	க ம ரி க	ரி ஸ ரீ	ஸ கா ரி	‖	ப ம க த	ாப நி நி	த த ப ப
	மோ த க	ர ச ரீ	ர மெத்தி	‖	மு க்திமா	ர்க்க மு னு	தெ லி ய க
4	ஸ நிதநி	தா ப ம	க ம ப த	‖	நி நிதத	ப ப க ா	கா ரீ
	வா	த த	ர்க்க	‖	மே	ல ஸ்ரீ	ம தா
5	நி ஸ ரீ	கா மப	தநி ஸரி	‖	க ரி ஸ நி	தா ப ம	கம கரி
	தி	த்யா	க	‖	ரா	ஜ நு	து ணி

கீர்த்தனம் 46.

சங்கராபரணம்—ஆதி.

பல்லவி.

ஸ்வரராக ஸுதாரஸயுத பக்தி
ஸ்வர்க்காபவர்க்கமுரா! ஓ மனஸா!

அனுபல்லவி.

பரமானந்தமனே கமலமுபை
பகபேகமு செலகேமி? மனஸா!

சரணம்.

(1) மூலாதாரஜ நாத மெருகுடே முதமகு மோக்ஷமுரா.
கோலாஹல ஸப்தஸ்வர கிருஹமுல குருதே மோக்ஷமுரா.

(2) மத்தள தாளகதுலு தெலியகனே [ஓ மனஸா
மர்த்தின்ஸுட ஸுகமா? சுத்தமனஸு லேக
பஜனசேயுட ஸுகரவிருத்தியுரா, ஓ மனஸா!

(3) பஹுஜன்மமுலகுபைனி ஞானியை பரகுட மோக்ஷமுரா.
ஸஹஜபக்திதோ ராகஞான ஸஹிதுடு முக்துடுரா
[ஓ மனஸா!

(4) ரஜதகிரீசுடு நகஜகு தெல்பு ஸ்வரார்ணவ மர்மமுலு
விஜயமுகல த்யாகராஜு செருகே. விச்வஸிஞ்சி
தெலுஸுகோ, ஓ மனஸா!

பதவுரை.

ஓ மனஸா —மனஸே!

ஸ்வரராக ஸுதாரஸயுதபக்தி —ஸப்தஸ்வரங்களின் சேர்க்கையாலுண்டாகும் ராகங்களென்ற அமிருதஸாரஸத்துடன் கூடின பக்தியே

ஸ்வர்க்காபவர்கமுரா.	—தேவலோகமாகிற ஸ்வர்க்கமும் என்று மழியாத முக்தியுமாம்.
பரமாந்தமனே	—பரமானந்தமென்ற
கமலமுபை	—தாமரையின்மேல்
பகபேகமு	—கொக்கும் தவளையும்
செலகி ஏமி? மனஸா !	—விளங்கினால் என்ன ப்ரயோஜனம்? மனஸே !
(1) மூலாதாரஜ	—தேஹத்திலுள்ள ஆறு ஆதாரங்களுக்குள் முதலான மூலா தாரத்திலுண்டாகும்,
நாதமு எருகுடே	—நாதத்தை அறிவதே
முதமகு	—ஆனந்தமாகிற
மோக்ஷமுரா.	—மோக்ஷம்.
கோலாஹல	—எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும்
ஸப்தஸ்வர க்ரஹமுல	—ஏழு ஸ்வரங்களால் அமைக்கப்பட்ட க்ரஹங்களின்
குருதே	—அடையாளமே
மோக்ஷமுரா	—மோக்ஷம்.
(2) மத்தள தாளகதுலு	—மத்தளத்தில் வாசிக்கப்படும் தாளங்களின் நடைகளை
தெலியகனே	—அறியாமலேயே
மர்த்தின்ஸுட	—அறைவது
ஸுகமா ?	—ஸுகமா ?
சுத்தமனஸு லேக	—கல்மஷமில்லாத மனஸை அடையாமல்
பஜனசேயுட	—ஈச்வரனைப் பஜிப்பது
ஸூகரவிருத்தியுரா	—ஊர்ப்பன்றியின் பிழைப்பே.
(3) பஹுஜன்மமுலகுபைனி	—எண்ணிறந்த ஜன்மங்களெடுத்த பிறகு
ஞானியை	—ஞானியாய்
பரகுட	—விளங்குவது
மோக்ஷமுரா.	—மோக்ஷம்.
ஸஹஜ பக்திதோ	—இயற்கையாயுள்ள பக்தியுடன்

ராகஞானஸஹிதுடு	—ராகஞானத்தையுடையவன்
முக்துடுரா	—முக்தனே.
(4) ரஜதகிரீசுடு	—கைலாஸபதி
நகஜகு	—பார்வதிக்
தெல்பு	—உபதேசித்த
ஸ்வரார்ணவமர்மமுலு	—ஸ்வரார்ணவமென்ற க்ரந்தத்தின் ரஹஸ்யங்கள் [அல்லது ஸ்வரமென்ற ஸமுத்ரத்தில் ஆழ்ந்திருக்கும் ரதநங்களைப் போன்ற கானரஹஸ்யங்கள்,]
விஜயமுகல	—பக்திக்கு விரோதிகளான விஷயங்களை ஜயித்த
த்யாகராஜுனுகு	—த்யாகராஜனுக்குத்
எருகே.	—தெரியும்.
விச்வஸிஞ்சி	—நம்பிக்கை வைத்து
தெலுஸுகோ மனஸா !	—அவைகளை தெரிந்துக்கொள், மனஸே!.

பொழிப்புரை.

மனஸே ! ஸப்தஸ்வரங்களின் சேர்க்கையாலுண்டாகும் ராகங்களென்ற அமிருதரஸத்துடன் கூடின பக்தியே, தேவலோகமாகிற ஸ்வர்க்கமும் என்றுமழியாத முக்தியுமாம். பரமானந்தமென்ற தாமரையின்மேல் கொக்கும் தவளையும் விளங்கினால் என்ன ப்ரயோஜனம்? தேஹத்திலுள்ள ஆறு ஆதாரங்களுக்குள் முதலான மூலாதாரத்திலுண்டாம் நாதத்தை அறிவதே ஆனந்தமாகிற மோக்ஷம். எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும் ஏழுஸ்வரங்களால் அமைக்கப்பட்ட க்ரஹங்களின் அடையாளமே மோக்ஷம். மத்தளத்தில் வாசிக்கப்படும் தாளங்களின் நடைகளை அறியாமலேயே அறைவது ஸுகமா? கல்மஷமில்லாத மனஸை அடையாமல் ஈச்வரனைப் பஜிப்பது ஊர்ப்பன்றியின் பிழைப்பே. எண்ணிறந்த ஜன்மங்களெடுத்த பிறகு ஞானியாய் விளங்குவது மோக்ஷம். இயற்கையாயுள்ள பக்தியுடன், ராகஞானத்தையுடையவன் முக்தனே. கைலாஸபதி பார்வதிக்கு உபதேசித்த ஸ்வரார்ணவமென்ற க்ரந்தத்தின் ரஹஸ்யங்கள் (அல்லது ஸ்வரமென்ற ஸமுத்திரத்தில் ஆழ்ந்திருக்கும் ரத்னங்களைப் போன்ற கானரஹஸ்யங்கள்) பக்திக்கு விரோதிகளான விஷயங்களை ஜயித்த த்யாகராஜனுக்குத் தெரியும். நம்பிக்கை வைத்து, அவைகளைத் தெரிந்துக்கொள்.

நோட்டுகள்.

(1) கானம் மோக்ஷத்தைக் கொடுக்கும் :—பக்தியே கானத்திற்கு ஆத்மாவென்றும் அதில்லாவிட்டால் பிணம்போலு மென்ற பரமதத்வத்தை உபதேசிக்கும் பல கீர்த்தனங்களில் இது முக்யமானது.

(2) 'ஸ்வர்க்காபவர்க்கமுரா':— ஸாமவேதாதிதம் கீதம் ஸம்ஜக்ராஹ பிதாமஹ:

கீதேன ப்ரீயதே தேவஸ் ஸர்வக்ஞ: பார்வதீபதி:

ஸாமகீதரதோ ப்ரஹ்மா வீணாஸக்தா ஸரஸ்வதீ

கிமன்யே யக்ஷகந்தர்வ தேவதானவ மானவா:

ப்ரஹ்மா ஸாமவேதத்திலிருந்து ஸங்கீதத்தை க்ரஹித்தார். கானத்தால் ஸர்வக்ஞனை சிவன் ப்ரீதியடைகிறார். விஷ்ணு வேணுநாதத்திற்கு வசப்பட்டிருக்கிறார். ப்ரஹ்மா ஸாமகானத்திலும் ஸரஸ்வதீ வீணைவாசிப்பதிலும் பரமானந்தமடைகிறார்கள். யக்ஷகந்தர்வதேவ தானவமனுஷ்யர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமோ?—ஸங்கீதரத்நாகரம்.

காவ்யாலாபாச்ச யேகேசித் கீதானி ஸகலானிச. சப்தமூர்த்திதரஸ்யைதே விஷ்ணோரம்சா மஹாத்மன:

ரஸமுள்ள காவ்யங்களும் ஸமஸ்த கானமும் நாதத்தை சரீரமாயுடைய விஷ்ணுவின் அம்சங்கள்.—விஷ்ணுபுராணம்.

ஸர்வேஷாமபி புண்யானு மஸ்தி ஸங்க்யா யசஸ்வினி

மமாக்ரே கீயதே யேன தஸ்ய ஸங்க்யா நவித்யதே.

பார்வதீ! ஸமஸ்த புண்யங்களுக்கும் எல்லையுண்டு, எண்ணமுடியும்; ஆனால் என் ஸந்நிதியில் கானம் செய்பவனுடைய புண்யத்தை வர்ணிக்கமுடியாது. புண்யபலங்களை எண்ணமுடியாது.

ந கிருதே தாதிருசீ ப்ரீதிர், ந க்ஷீரே ந ச குக்குலௌ

யாதிருசீ சைவ காந்தர்வே மம ப்ரீதிர் வரானனே

எனக்கு ஸங்கீதத்தில் எவ்வளவு ப்ரீதியோ அவ்வளவு ப்ரீதி நெய் பால் குக்குலு என்ற தூபம் இவைகளிலில்லை.

கீதக்ஞோ யதி கீதேன நாப்னோதி பரமம் பதம்.

ருத்ரஸ்யானுசரோ பூத்வா தேனைவ ஸஹ மோததே.

ஸங்கீதநிபுணன் கானத்தால் பரமபதத்தை அடையாவிட்டாலும் ருத்ரனுக்குப் பரிவாரமாய் அவருடன் ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.

"த்ரிவர்க்க பலதாஸ் ஸர்வே தானயக்ஞ ஜபாதய: ஏகம் ஸங்கீதவிக்ஞானம் சதுர்வர்க்க பலப்ரதம்" தானம் யக்ஞம் ஜபம் முதலியவை மூன்று புருஷார்த்தங்களை மாத்ரம் கொடுக்கும்; ஸங்கீதஞானமொன்றே நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியது.

ஹரிசாதிஸ்துதௌ தர்மோ, தனகாமௌ நிருபாதித;
நிஷ்காமஸ்த தனுஷ்டாஞன் மோக்ஷமாப்னோத்ய ஸம்சயம்.

த்ரிமூர்த்திகளை ஸ்தோத்ரஞ்செய்வதால் தர்மமும், அரசர்கள் முதலியவர்களால் அர்த்தமும் காமமும், ஸங்கீதத்தை ப்ரயோஜனத்தை அபேக்ஷியாமல் அப்யஸிப்பதால் மோக்ஷமும் ஸம்சயமில்லாமல் கிடைக்கும்—சிவஸர்வஸ்வம்.

இதே தாத்பர்யத்தையுடைய "ஸங்கீதசரஸ்த்ரஞானமு," "ஸங்கீதஞானமு பக்திவிஞ." "மோக்ஷமுகலதா," "நாத லோலுடை", "நாதோபாஸனசே", "ஆனந்தஸாகர முதலிய கீர்த்தனங்களைப் பார்க்க.

(3) பகபேகமு:—ஸ்படிகம்பொல் தெளிந்து குளிர்ந்த நீரால் நிறைந்திருக்கும் தாமரையோடையில் அழகான ராஜ ஹம்ஸங்கள் நீந்தித் தாமரைமலர்களின்மேல் உட்காருவது வெகு அழகாயிருக்கும். கறுத்த தேன்வண்டுகள் அந்த மலர்களில் வந்திறங்கி அலைகளிலுள்ள தேனைக் குடிதது, மதங்கொண்டு ரீங்காரஞ்செய்வது அழகு. ராஜஹம்ஸத்திற்குப் பதிலாக விகாரமான கொக்கும், வண்டுக்குப் பதிலாக அருவருப்பையுண்டாக்கும் தவளையும் மலர்ந்த செந்தாமரையின்மேல் உட்கார்ந்தால் பார்ப்பதற்கு எவ்வளவு வெறுப்பாயிருக்கும்! பக்தியால் அலங்கரிக்கப் படாத கானமும் அப்படியே.

(4) ஆதாரங்கள்—லிங்கத்திற்கு இரண்டு விரல்கடை கீழிலும் குதத்திற்கு இரண்டு விரல்கடை மேலும் நாலு விரல்கடை அகலமுள்ள ஒரு கிழங்கு போன்ற ஓர் வெளியுண்டு. அந்த வெளியில் குண்டலினி தேவதைவஸிக்கிறாள். அது மூன்றரை சுற்றுகளுடன் ஸகல நடிகளையும் சூழ்ந்து தன்வாலை வாயில் கௌவிக்கொண்டு ஸுஷும்ஞ நாடியின் த்வாரததை அடைத்துக் கொண்டிருக்கிறது. அது அங்கே ஸர்ப்பத்தைப்போல் ஸ்வப்ரகாசத்துடன் விளங்குகிறது. இதே விஷ்ணுசக்தி; த்ரிகுணங்களுக்கும் மாதா; இதற்குப் பெயர் மூலாதாரபத்மம் வசஷஸ என்ற நான்கு எழுத்துகளால் குறிக்கப்படும் நான்கு தளங்களுண்டு. இதற்கு ஸமீபத்தில் கூடமென்ற ஸ்வர்ணபூமியுண்டு. அதற்கு அதிஷ்டானதேவதை தேவிரண்டன், அதிஷ்டான தேவி டாகினி. இதற்கு மேல் ஸ்வாதிஷ்டானம், மனிபூரகம், அஞஹதம், விசுத்தி, ஆக்ஞா, ஸஹஸ்ராரமென்ற சக்ரங்களுண்டு.

இரண்டு கட்டைவிரல்களின் நுணியால் காதுகளையும் அடுத்த விரல்களால் கண்களையும் நடுவிரல்களால் மூக்குத்வாரங்களையும் மிகுந்த விரல்களால் உதடுகளையும் மூடிக்கொண்டு மனஸை ஒரே நிலையாய் நிறுத்திஞல நாதபேதங்களைக் கேட்கலாம். மதங்கொண்ட வண்டு, புல்லாங்குழல், வீணை, மணிகள், இடி, ஸமுத்ரகோஷம் முதலிய நாதங்கள் கேட்கப்படும்.—சிவஸம்ஹிதை.

(5) 'மத்தளதாளமு—'ஸொகஸுகா மிருதங்க' என்ற கீர்த்தனத்திலும் மத்தளத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்வதைப் பார்க்க.

(6) ஸூகர விருத்தியுரா—ஸாரமுள்ள பதார்த்தங்களை மனிதர்கள் புஜித்து, ஸாரமில்லாத கழித்த பாகத்தை மலரூபமாய் வெளியில் விடுகிறார்கள். பன்றிகள் அதையே ப்ரீதியுடன் புஜித்துத், தங்களைப் போஷிப்பதற்கு அதிலிருந்து ஸாரத்தை எதிர்பார்க்கின்றன. அப்படி கானத்திற்கு ஸாரரூபமான பக்தியில்லாவிட்டால் அது மலத்திற்கு ஸமானம். பக்தியில்லாமல் வெறும் கானத்தால் பஜனைசெய்து பகவானை ஸந்தோஷப்படுத்துகிறோமென்று எண்ணும் மனிதர்கள் பன்றிகளுக்கு ஸமானமே.

(7) பஹூனாஜன் மமுலபை—

பஹூனாம் ஜன்மனாமந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே.
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

ஸகலமும் வாஸுதேவனென்ற ஞானத்தை ஸம்பாதித்தவன் அநேக ஜன்மங்களை எடுத்து, முடிவில் என்னை அடைகிறான், அந்த மஹாத்மா கிடைப்பதரிது. அல்லது—முமுக்ஷு அநேக ஜன்மங்களை யெடுத்துப் பிறகு ஸகலமும் வாஸுதேவனேயென்ற ஞானத்தையடைந்து பிறகு என்னைச் சேருகிறான்—பகவத்கீதை.

(8) முக்துரோ:—

"நாஹம் வஸாமி வைகுண்டே! ந யோகிஹ்ருதயே ரவௌ.
மத்பக்த யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத"

"நாரத! நான் வைகுண்டத்தில் வஸிக்கிறேனென்று சிலர் சொல்லுகிறார்கள்; யோகிகளின் ஹ்ருதயத்தில் வஸிக்கிறேனென்று சிலர் சொல்லுகிறார்கள்; ஸூர்ய மண்டலத்தின் நடுவில் நாராயணமூர்த்தியாய் விளங்குகிறேனென்று சிலர் சொல்வதுண்டு. அவ்விடங்களில் நான் இருக்கிறதில்லை. ஆனால் என் பக்தர்கள் என் குணங்களை மதுரமாய்ப் பாடும் இடங்களில் என்னைப் பார்க்கலாம்."—பாகவதம்.

(9) ஸ்வரார்ணவ மர்மமுலு—ஒரு நாள் காலையில் நாரதமஹர்ஷி ஸந்யாஸிவேஷந்தரித்து த்யாகராஜஸ்வாமிகளின் வீட்டிற்கு வந்து அவரைப் பார்த்து "இவ்வூரில் த்யாகராஜனென்று ஒரு ஸங்கீதவித்வான் இருக்கிறாராம். அவருடைய கானத்தைக் கேட்கவேண்டுமென்று எனக்கு ஆசையுண்டாய், அவரைத் தேடிவந்தே" னென்றார். அப்பொழுது த்யாகராஜஸ்வாமிகள் எண்ணையிட்டுக்கொண்டிருந்தார். உடனே அந்த யதீச்வரருக்கு ஸமஸ்த உபசாரங்களைச் செய்து நமஸ்கரித்து "ஸ்வாமி! த்யாகராஜனென்பவன் நானே" யென்று தம்பூராவை அழகாய் சுருதிசேர்த்து, ஒரு முஹூர்த்தம் வரையில் கந்தர்வகானத்தைப் பழிக்கும்படி பாடினார். அந்த யதிச்ரேஷ்டர் மெய்மறந்து ஆனந்த பாஷ்பம் பெருக "கானரஸத்தை அறிந்தவர்களுக்குள் உன்னைப் போன்றவர் இந்த லோகத்தில் கிடையாதெ"ன்று கொண்டாடி, "இதோ இந்தப் புஸ்தகம் உன்னி

த்திருக்கட்டும் ; நான் போய் ஸ்நாந ஜபதபானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு இங்கே பிக்ஷைக்கு வருகிறே''னென்று சொல்லிப்போனார். பிறகு வெகு நேரம் காத்திருந்தும் அந்த யதி திரும்பி வாராததால் ஸ்ரீ த்யாகராஸ்வாமிகள் மிகவும் கவலைகொண்டு ஊரெங்கும் விசாரித்துத் தேடியும் அப்படிப்பட்டவரைக் காணோ'மென்று எல்லோரும் சொல்லக்கேட்டார். அஸ்தமனம் வரையில் ஆஹாரமில்லாமல் உபவாஸமிருந்து, ராத்ரி பூஜைசெய்து ஸ்வாமிஸன்னிதியில் அயர்ந்து தூங்கிவிட்டார். தான் பகலில் கண்ட ஸந்யாஸி ஸ்வப்னத்தில் மறுபடியும் தோன்றி,''அப்பா! நான் பகவத் பக்தர்களுக்குத் தாஸனான நாரதன். உன் வித்யை பக்தி அனுஷ்டானம் உத்தமகுணங்கள் முதலியவைகளுக்குக் கட்டுப்பட்டு, அபரிமித ஸந்தோஷத்துடன் இன்று பகலில் உனக்குத் தர்சனங்கொடுத்தேன். நான் உன்னிடத்தில் கொடுத்த புஸ்தகத்திற்கு ஸ்வரார்ணவமென்று பெயர். இதை இதுவரையில் பூலோகத்தில் எவரும் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை.இந்த க்ரந்தத்தைப் பார்ப்பதற்கு உன்னைத் தவிர வேறு எவர்க்கும் யோக்யதையில்லை. இந்தக் கலியுகத்தில் பகவத்குணங்களும் கானவித்யையின் மஹிமையும் உன்னால் ஜீவகோடிகளுக்கு வெளிப்படவேண்டுமென்ற உத்தேசத்துடன் இதை உன்னிடத்தில் கொடுத்தேன். இது முன் காலத்தில் பரமசிவன் கைலாஸகிரியில் பார்வதிக்கு உபதேசித்த பரமரஹஸ்யங்களிலொன்று. இனிமேல் இந்தப் பாரத்தை உன்னிடத்தில் ஒப்புவித்துக் கவலைதீர்ந்தேன்'' என்று மறைந்தார். த்யாகராஜஸ்வாமிகள் காலையில் எழுந்து அந்தப் புஸ்தகத்தைத் திறந்து பார்க்கையில் ஸ்வப்னத்தில் கண்ட ஸந்யாஸி சொன்னபடியே இருக்கக்கண்டு தன்னிடத்தில் பரமகிருபை செய்து, தன்னைத் தேடி வந்து தர்சனங்கொடுத்த நாரதமுனீந்த்ரரைத் தான் தெரிந்து கொள்ளாமலும் தன் ஆசை தீர அவரைப் பூஜிக்காமலும் தான் அவரிடத்தில் பெறக்கூடிய பரமலாபத்தைப் பெறாமலும் மோசம்போனதை நினைத்து நினைத்துத் தன் பூர்வஜன்மகர்மத்தை நொந்து மனமுருகி, ''நாரத குருஸ்வாமி, ஸ்ரீ நாரத, வரநாரத வென்ற அத்புதமான கீர்த்தன ரத்னங்களை இயற்றினார். வால்மீகிமஹர்ஷிக்கு ராமனுடைய மஹிமையை உபதேசித்த நாரதமுனி வால்மீகி அம்சமாய் அவதரித்த ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளுக்குத் தர்சனங்கொடுத்து ராமதாரகமந்த்ரத்தை உபதேசித்தார்.

(10) விச்வஸிஞ்சி—குரு ஸத்யக்ஞானானந்தஸ்வரூபியென்றும் தன்னை அக்ஞானமென்ற அந்தகாரத்திலிருந்துகரையேற்றி அகண்டஜ்யோதிஸ்வரூபியான பகவானுடைய திருவடிகளை அடையும் மார்க்கத்தைக் காட்டக்கூடியவரென்றும் நம்பிக்கையிருந்தால் அவருடைய உபதேசத்தில் ச்ரத்தையுண்டாய், அவைகளைப் பூர்ணமாய் அனுஷ்டிக்கும் மனவுறுதி ஏற்படும். இதைத் தவிர மற்ற ஸாதனங்களும் குணங்களும், ஸ்வரஞானம் லயஞானம் ப்ரஸ்தாரஞானம் சொல்கட்டுகள் கல்பனைகள் எடுப்புகள் விஷமமான பல்லவிகளை விஷமமாய்ப் பாடுவது 108 தாளம் முதலிய தத்காலத்து கானமர்மங்களில் பரிசயமும் அவ்வளவு அவச்யமல்ல.

''ச்ரத்த்ரமயோயம் புருஷோ, யோயச்சரத்த; ஸ எவ ஸ; ஜீவன் ச்ரத்தயின் ரூபமாகவே இருக்கிறான். ஒருவன் எதில் ச்ரத்தைவைக்கிறானோ அவன் அதே ஆகிறான்—பகவத்கீதை 17. 3.

ஸம எடுப்பு.

பல்லவி.

1	ஸா ரீ	கா ,, ,,	கா ரீ	மா ,, ,,	தா பா	மா கா	ரி க ம க	ரி ஸ ஸ நி
	ஸ்வ ர	ரா	க ஸு	தா	ர ஸ	யு த	ப	க்தி
2	ஸா ரீ	க ஸ ரி க	கா ரீ	மா ,, ,,	தா பா	மா கா	ரி க ம க	ரி ஸ ஸ நி
	ஸ்வ ர	ரா	க ஸு	தா	ர ஸ	யு த	ப	க்தி
3	ஸா ரீ	க ஸ ரி க	கா க ரி	மா ம ரி	பா ப ரி	மா ம ரி	கா க ஸ	ரீ ரி நி
	ஸ்வ ர	ரா	க ஸு	தா	ர ஸ	யு த	ப	க்தி
4	ஸ நி ஸா	ரி ரி க க	ம ம பா	,, க ரி நி	ஸா ,, ,,	,, ,, பா	,, ,, ப ம	க ரி ஸ நி
	ஸ்வ	ர்க்கா ப	வ	ர்க்க மு	ரா	ஓ	ம ன	ஸா
5	ஸ நி ஸா	ரி ரி க க	ம ம பா	,, க நி நி	ஸா ,, ,,	,, ,, ஸா	,, ,, நி த	ப ம க ரி
	ஸ்வ	ர்க்கா ப	வ	ர்க்க மு	ரா	ஓ	ம ன	ஸா
6	ஸ நி ஸா	ரி ரி க க	ம ம த ப	ப க ரி நி	ஸா ,, ,,	,, ,, ரீ	,, ,, ஸ நி	த ப ம க
	ஸ்வ	ர்க்கா ப	வ	ர்க்க மு	ரா	ஓ	மன	ஸா
7	ஸ நி ஸா	ரி ரி க க	ம ம த ப	ப க ரி நி	ஸா ,, ,,	,, ,, தநிஸரி	கரிஸநிதநிஸரி	ஸநிதபபமகரி
	ஸ்வ	ர்க்கா ப	வ	ர்க்க மு	ரா	ஓ	ம ன	ஸா

அநுபல்லவி.

1	கா மா	பா ,, ,,	க ம ம ப	ா த நீ	ஸா ,, ,,	ஸ நி நி த	த ப ப ம	ப ம க ரி
	ப ர	மா	னந்	த ம	னே	க ம	ல மு	பை
2	கா மா	பா ,, ,,	க ம ம ப	ா த நீ	ஸா ,, ,,	ரீ நி ஸ த	நி ப த ம	ப க ம ரி
	ப ர	மா	னந்	த ம	னே	க ம	ல மு	பை
3	கா மா	பா ,, ,,	க ம ம ப	ா த நீ	ஸா ,, ,,	ஸாரிஸநீஸநி	தாநிதபாதப	மாமகாமரி
	ப ர	மா	னந்	த ம	னே	க ம	ல மு	பை
4	த த பா	த த மா	ப ப கா	கா ரீ	கா மா	பா ம ப	த நி த ப	ம க க ரி
	ப க	பே	க மு	செ ல	கே	மி	ம ன	ஸா

சரணம்

1	பா பா	,, ப பா	,, ,, மா	,, ம மா	,, ,, க க	ா க கா	க ரி ஸ ரி	க ரி ரீ
	ர ஜ	த கி	. ரீ	சு டு	நக	ஜ கு	தெ	ல்பு
2	ரீ பா	மா மா	மா ம க	க ரி ஸ நி	ஸ ரி க ரி	கா ,, ,,	ரீ ,, ,,	ஸா ,, ,,
	ஸ்வ ரா	ர்ண	வ ம		ர்ம மு	லு		
3	ஸ நி ரீ	ஸா கா	ரீ ம ம	கா ப ப	மா தா	பா ப ம	க ரி க ம	பா ,, ,,
	வி ஜ ய	மு க	ல த்யா	க	ரா	ஜு கெ	ரு கே	
4	ஸா ஸா	ஸா ,, ,,	ஸ நி த நி	ப த ஸ நி	ஸா ,, ,,	ப ம த நி	த ப ம க	க ரி ஸ நி
	வி ச்வ	ஸி	ஞ்சி	தெலுஸு	கோ	ஓ ம	ன ஸா	

44—மே

கீர்த்தனம் 47.

பவப்ரியா—தேசாதி.

பல்லவி.

ஸ்ரீகாந்த! நீ யெட பலாதிபலா செலகங்கலேதா? வாதா?

அனுபல்லவி.

பாகாரிநுத! நீவாரி பலாபல முனு தெலியங்கலேதேமி?

சரணம்

காகதைத்யுனிபை சரமுன னேய

கஞ்ஜஜாஸ்த்ரமை பரகலேதா?

ஸ்ரீகர! த்விஜுலு தாரெருங்கலேனி சிந்த

நீகு தோத்லதேமி? த்யாகராஜனுத!

பதவுரை.

ஸ்ரீகாந்த	—லக்ஷ்மீபதே!
த்யாகராஜனுத	—த்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே!
நீயெட	—உன்னிடத்தில்
பலா அதிபலா	—பலே அதிபலேயென்ற வித்யைகள்
செலகங்கலேதா	—விளங்கவில்லையா?
(நாதோ) வாதா	—என்னுடன் சண்டைபோடவேண்டுமா?
பாகாரிநுத	—இந்த்ரனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே?
நீவாரி	—உன்னைச் சேர்ந்தவர்களின்
பலாபலமுனு	—பலமும் பலமின்மையும்

தெலியங்கலேதேமி	—ஏன் தெரியவில்லை ?
காகதைத்யுனிபை	—காகாஸுரன்மேல்
சரமுனனு வய	—நாணலை ப்ரயோகிக்க
கஞ்ஜஜாஸ்த்ரமை	—அது ப்ரஹ்மாஸ்த்ரமாய்
பரகலேதா	—பெருகவில்லையா ?
ஸ்ரீகர	—மங்களத்தைச் செய்கிறவனே !
த்விஜாலு	—ப்ராஹ்மணர்கள்.
தாரி எருங்கலேனி	—வழி தெரியாமலிருக்கும்
சிந்த	—கவலை
நீகு	—உனக்கு
தோத்ஸதேமி	—தோற்றும விருப்பதேன் ?

பொழிப்புரை.

லக்ஷ்மீபதே ! த்யாகராஜனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே ! பலை அதிபலையென்ற வித்யைகள் உன்னிடத்தில் விளங்கவில்லையா ? என்னுடன் சண்டைபோடவேண்டுமா ? இந்த்ரனால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனே ! உன்னைச் சேர்ந்தவர்களின் பலமும் பலமின்மையும் ஏன் தெரியவில்லை ? காகாஸுரன்மேல் நாணலை ப்ரயோகிக்க அது ப்ரஹ்மாஸ்த்ரமாய்ப் பெருகவில்லையா ? மங்களத்தைச் செய்கிறவனே ! ப்ராஹ்மணர்கள் வழிதெரியாமலிருக்கும் கவலை உனக்குத் தோற்றுமலிருப்பதேன் ?

பாகாரிநுத—பாகனென்ற அஸுரனைக் கொன்றதால் இந்த்ரனுக்குப் பாகாரியென்ற பெயர் கிடைத்தது.

காகதைத்யுனிபை—'எவரிச்சிரிரா' என்ற கீர்த்தனத்தின் நோட்டுகளில் காகாஸுரவிருத்தாந்தத்தைப் பார்க்க.

பலாதிபலா—உன்னிடத்தில் ஸாதாரண பலம் அதிகபலமென்ற பெயரையுடைய வித்யைகள் இருக்கும்பொழுது அவ்விரண்டிற்கும் பேதம் உனக்குத் தெரியாமற்போனதேன் ? அல்ப பலமுள்ள ஒரு காக்கையிடத்தில் அளவற்ற சக்தியுள்ள ப்ரஹ்மாஸ்த்ரத்தை ஏன் விட்டாய் ?

6 தள்ளி எடுப்பு.

பல்லவி.

1		பா தா நீ ,, ,, தா	,, ,, பா ,, ,, பா பா பா பா ,, ,,
		ஸ்ரீ கா ந்த	நீ யெ ட ப லா
2	தா பா மா	பா தா நீ ,, ,, தா	ப த நி த த ப மா மா மா பா ,, ,,
	தி ப ல	ஸ்ரீ கா ந்த	நீ யெ ட ப லா
3	தா பா மா	பா தா நீ ,, ,, தா	பா ,, ,, ,, ,, கா கா கா மா ,, ,,
	தி ப ல	ஸ்ரீ கா ந்த	நீ யெ ட ப லா
4	தா பா மா	பா தா நீ ,, ,, தா	ப த நி த த ப மா மா மா ப த நி ஸ
	தி ப ல	ஸ்ரீ கா ந்த	நீ யெ ட ப லா
5	ஸா நீ தா	பா தா நீ ,, ,, தா	ப த நி த த ப மா மா மா ப த நி ஸ
	தி ப ல	ஸ்ரீ கா ந்த	நீ யெ ட ப லா
6	ரி ஸ நி த ப ம	மா மா மா ,, ,, கா	ரீ ,, ,, ,, ,, ஸா ,, ,, நி ஸ கா ,, ,,
	தி ப ல	செ ல கங் க	லே தா வா
7	க ம பா மா		
	தா		

5-வது ஸங்கதிக்குப் பிறகு முதல் ஸங்கதியைப் பாடி 6-வதைப் பாடவும்.

அனுபல்லவி.

1		பா தா நீ ,, ,, ஸா	ஸா ஸா ,, ,, ஸா ,, ,, ஸா ,, ,, ஸநீ
		பா கா ரி	நு த நீ வா ரி
2	நீ தா ,, ,,	பா தா நீ ,, ,, ஸா	ஸா ஸ ,, ,, ஸா ,, ,, ஸா ,, ,, ரி
	ப லா	பா கா ரி	நு த நீ வா ர
3	த நீ த ப ம	பா தா நீ ,, ,, ஸா	ஸா ஸ ,, ,, த நி ஸா த நி ஸா நீ
	ப லா	பா கா ரி	நு த நீ வா ரி
4	த நீ த ப ம	பா தா நீ ,, ,, ஸா	ஸா ஸ ,, ,, நீ கா ஸ ரி கா ரீ
	ப லா	பா கா ரி	நு த நீ வா ரி
5	ஸ ரி க ரி ஸ நி	பா தா நீ ,, ,, ஸா	ஸா ஸ ,, ,, ஸா ரீ கா ரீ கா
	ப லா	பா கா ரி	நு த நீ வா ரி
6	ப ம க க ரி ஸ	பா பா ப ம கா கா	ரீ ஸா ,, ,, ஸா ஸா நீ ,, ,, தா
	ப லா	ப ல மு னு	தெ வி யங் க வே தே
7	,, ,, நி த ப ம		
	ஷி		

சரணம்.

1		பா பா பா ,, ,, பா	பா பா ,, ,, மா மா ப ம கா கா
		கா க தை த்யு	ணி பை ச ர மு ன
2	ரீ ஸா ,, ,,	கா ரீ கா ,, ,, ரீ	ஸா ,, ,, ,, ,, நி ஸ கா கா க ம ப த
	ணே ய	கஞ் ஜ ஜா ஸ்த்ர	மை ப ர க லே
3	பா ,, ,, ,, ,,	பா தா நீ ,, ,, ஸா	நீ ஸா ,, ,, ஸா ரீ கா ,, ,, கா
	தா	ஸ்ரீ க ர த்வி	ஜ ஞு தா ரெ ருங் க
4	மா ,, ம ,, ,,	பா பா ப ம கா கா	ரீ ஸா ,, ,, ஸா ஸா ரீ நீ தா
	லே ணி	சிந் த நீ கு	தோ த்ஸ தே மி த்யா க ரா
5	,, ,, நி த ப ம		
	ஜனு த		

கீர்த்தனம் 48.

மே—28.
ஸரிகபதஸ
ஸதபகரிஸ

மோஹனம்—ஆதி.

பல்லவி.

பவநுத ! நா ஹிருதயமுன ரமிம்புமு படலிகதீர.

அனுபல்லவி.

பவதாரக ! நாதோ பஹுபல்கின படலிக தீர கமலஸம் (பவ)

சரணம்.

(1) பவனஸுதப்ரிய ! தனகை திரிகின படலிகதீர,
பவனமு ஜேரி நன்னு வெரபிஞ்சின படலிக தீர கமலஸம். (பவ)

(2) வரமகு நைவேத்யமுலனு ஸேயனி படலிக தீர;
பரவலேக ஹரிபோயினட் டாடின படலிக தீர கமலஸம். (பவ)

(3) ப்ரபலஜேசி நன்னு ப்ரோசே னனுகொன்ன படலிக தீர,
ப்ரபு நீவு, த்யாகராஜுனுகி படலிக தீர கமலஸம். (பவ)

வேறு பாடங்கள்.

(களா.) i. பஹுபல்கின—பாகு பல்கின ii. திரிகின—வெலஸின
iii. ப்ரோசேனனு கொன்ன—தனகை பொடகன்ன
(ஸார.) ,, —ப்ரோசே நன்ன ii ப்ரபுநீவு—ப்ரபுநீவே.

பதவுரை.

கமலஸம் பவனுத —தாமரையில் பிறந்த ப்ரஹ்மாவால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்ட ராம !
படலிகதீர —ச்ரமபரிஹாரத்திற்காக
நாஹிருதயமுன —என் ஹிருதயத்தில்

ரமிம்ப்மு	—ஆனந்தமாய் வவி.
பவதாரக	—ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டச் செய்கிறவனே !
நாதோ	—என்னுடன்
பஹூபல்கின	—அதிகமாய்ப் பேசின
படலிகதீர	—ச்ரமம் தீரும்படி (என் ஹிருதயத்தில்)
பவனஜாதப்ரிய	—வாயு புத்ரனான ஆஞ்ஜநேயனுக்கு ப்ரியமானவனே !
தனகை	—எனக்காக
திரிகின	—அலைந்த
படலிகதீர	—ச்ரமம் தீரும்படிக்கும்
பவனமு ஜேரி	—என் வீட்டிற்கு வந்து
நன்னு	—என்னை
வெரபிஞ்சின	—பயமுறுத்தின
படலிகதீர	—ச்ரமம் தீரும்படிக்கும் (என் ஹிருதயத்தில்)
வரமகு	—ச்ரேஷ்டமான
நைவேத்யமுல	—நைவேத்யங்களை
ஸேயனி	—ஸமர்ப்பிக்காததா லுண்டான
படலிகதீர	—ச்ரமம் தீரும்படிக்கும்
பரவலேக	—என்னுடன் விஸ்தாரமாய்ப் பேசமுடியாமல்
ஸரிபோயினட்டு	—முடிவாய்ப் பதில் சொன்னது போல்
ஆடின	—பேசின
படலிகதீர	—ச்ரமம் தீரும்படிக்கும் (என் ஹிருதயத்தில்)
நின்னு	—என்னை
ப்ரபல ஜேஸி	—ப்ரஸித்தி பெறச்செய்து
ப்ரோசேனனு	—காப்பாற்றுவேனென்று
அனுகொன்ன	—ப்ரதிக்ஞை செய்துகொண்ட
படலிகதீர	—ச்ரமம் தீரும்படிக்கும்

நீவு ப்ரபு —நீயோ மஹாப்ரபு !
த்யாகராஜுனிகி —த்யாகராஜனுகிற எனக்கு
படலிகதீர —ச்ரமம் தீரும்படிக்கு (என்ஹிருதயததில்).

பொழிப்புரை.

தாம்மரையில் பிறந்த ப்ரஹ்மாவால் ஸ்தோத்ரம்பண்ணப்பட்ட ராம! ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டச்செய்கிறவனே! வாயுபுத்ரனை ஆஞ்ஜநேயனுக்கு ப்ரியமானவனே! என்னுடன் அதிகமாய்ப் பேசின ச்ரமம் தீரும்படிக்கும், எனக்காக அலேந்த ச்ரமம் தீரும்படிக்கும், என் வீட்டிற்கு வந்து என்னைப் பயமுறுத்தின ச்ரமம் தீரும்படிக்கும், ச்ரேஷ்டமான நைவேத்யங்களை ஸமர்ப்பிக்காததாலுண்டான ச்ரமம் தீரும்படிக்கும், என்னுடன் விஸ்தாரமாய்ப் பேசமுடியாமல் முடிவாய்ப் பதில்சொன்னதுபோல் பேசின ச்ரமம் தீரும்படிக்கும், என்னை ப்ரஸித்திபெறச் செய்து காப்பாற்றுவேனென்று ப்ரதிக்ஞை செய்து கொண்ட ச்ரமம் தீரும்படிக்கும், நீயோ மஹாப்ரபு! த்யாகராஜனுகிற எனக்கு ச்ரமம் தீரும்படிக்கும் என் ஹிருதயத்தில் ஆனந்தமாய் வஸியும்:

நோட்டுகள்.

நா ஹிருதயமுன :—ச்ரமபரிஹாரத்திற்காக ஏகாந்தமும் இதரர்களுடைய உபத்ரவமில்லாததுமான ஸ்தலமே ச்ரேஷ்டம். அப்படி என் ஹிருதயத்தில் உம்மைத் தவிர வேறொருவருக்கும் இடங்கொடுக்கிறதில்லை. ஆகையால் இதே நீர் வஸிக்கத் தகுந்த ஸ்தலம். நாமகுஸுமமுலு வென்ற கீர்தனத்தின் சரணத்தில் மானஸபூஜையின் விதியை உபதேசிக்கும்பொழுது தன் ஹிருதயத்தைப் பகவானுக்குத் தகுந்த வாஸஸ்தலமென்று சொல்லுகிறார்.

பவனமு ஜேரி :—ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் ஸ்ரீ ராமமூர்த்தியின் அபாரகிருபாஸமுத்ரத்தில் முழுகிக்கொண்டிருக்கையில் ஸகல லோகங்களிலும் தனக்கிடில்லையென்று எண்ணங்கொண்டார். அப்பொழுது ராமனைப் பார்த்து "ஸ்வாமி! தங்களுடைய கிருபாகடாக்ஷத்தால் அக்ஞானத்தை ஜயித்தேன்; மாயையைத் தாண்டினேன். இனி அது என்னை முன்போல் வஞ்சிக்க முடியுமோ" வென்றார். "தைவீ ஹ்யேஷா குணமயீ, மம மாயா துரத்யயா மாமேவ யேப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே. என்மாயை திவ்யசக்தியுள்ளது; த்ரிகுணங்களால் ஏற்பட்டது; ஒருவராலும் தாண்டமுடியாதது; என்னையே த்யானத்தால் அடைகிறவர்களே இதைத் தாண்டுவார்கள்." என்று பகவான் சொன்னப்ரகாரம் மார்க்கண்டேயர் முதலிய மஹான்களால் அறியமுடியாத பகவன்மாயையை ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளால் அறியமுடியுமோ? சில தினங்களுக்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள், மாத்யாஹ்னிகஸ்நாநம் செய்து ராமனுக்கு ஆராதனஞ்செய்துகொண்டிருக்கும்பொழுது தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து ஒரு கொத்தவாலும் அநேக ஸேவகர்களும் சிப்பாய்களும் படபடவென்று வாசல் கதவை இடித்தார்கள். சிஷ்யர்கள் பயந்து கதவைத் திறக்க, அவர்கள் உள்ளே வந்து, "த்யாகராஜய்யா வீடு இதுதானு" வென, அங்கிருந்தவர்கள் "ஆம், பூஜைசெய்து கொண்டிருக்கிறார்" என்றார்கள். "நீங்கள் இந்தக்ஷணமே போய் ஸமஸ்தானத்திலிருந்து அவருக்குப் பிடிவாரண்டு வந்திருக்கிறதென்

ம், இப்பொழுதே அவனைக் கைதிசெய்து நாங்கள் கொண்டுபோக வந்திருக்கிறோமென்றும் தெரிவியுங்களென்றார்கள். அப்படியே கரிக்க, ஸ்வாமிகள் ஒன்றுந்தோன்றாமல் திகிலடைந்து "நாம் என்ன குற்றம் செய்தோம்? எதற்காக நம்மைக் கைதிசெய்து வாரண்டில் பிடித்துக்கொண்டு போகவேண்டு"மென்று புத்திகலங்கிப் பூஜையை வெகுசீக்ரமாய் முடித்து வெளியில் வந்து "யார்? என்ன விஷயமெ"ன்று கேட்க, "நீர் இன்னதினத்தில் இன்ன துஷ்டர்களுடன் சேர்ந்து இன்னக்ராமத்தில் தீவட்டிக்கொள்ளை அடித்ததாயும், அப்பொழுது சிலரைக் காயப் படுத்திக்கொன்றதாயும் குற்றஞ்சாட்டப் பட்டுத், தகுந்த ருஜு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு நிமிஷங்கூட உம்மை அப்புறம் போகவிடாமல், கைப்பிடியாய் பந்தோகானாவில் கொண்டு போய் வைத்து விசாரணை காலத்தில் ஆஜர் செய்ய வேண்டுமென்று ஸர்க்கார் முத்ரையுடன் எங்களுக்கு இதோ தாகீது கிடைத்திருக்கிறது ஜல்தி, எங்களுடன் புறப்படவேண்டு"மென்றார்கள். இதைக்கேட்டு அங்கிருந்தவர்களில் சிலர், "நாம் இனி ஸ்வாமிகளைக் காணப்போகிறதில்லை. ஐயோ! இந்த ராம பக்தனுக்கு இவ்வித அவமானமும் கோர தண்டனையும் நேர்ந்ததே" யென்றும், சிலர் 'இவ்வித துஷ்கிருத்யங்களை இவன் நடத்திவந்தானா? எவ்வளவு சாதுர்யமாய் ஒருவர்க்குந் தெரியாமல் மறைத்து வந்தான்! என்னவேஷம்! இவன் மஹா ஆஷாட பூதி. தகுந்த காரணமில்லாமல் மஹாராஜா இப்படிச் செய்வாரா' வென்று பேசிக்கொண்டார்கள். ராஜாவின் ஆக்ஞை யென்று தெரிந்தவுடன் ஒருவரும் அவரிடத்தில் பேசத்துணிவுமில்லை, அவரை நெருங்கப் பயப்பட்டார்கள், ஸ்வாமிகள். ப்ரமித்துத் திகைத்து, ஒன்றும் தோன்றாமல், பிறகு ஒருவாறு தைர்யப்படுத்திக்கொண்டு, தனக்கு ஸர்வகாலத்திலும் ஸர்வ தேசத்திலும் பரமமித்ரனும் ரக்ஷகனுமான ஸ்ரீ ராமனை நினைத்து, அவரே சரணமென்று அவருடைய ஸன்னதியில் போய் விழுந்து "ராம! நான் என்ன செய்வேன்? உன்னைத்தவிர எனக்கு யாரிருக்கிறார்கள்? காப்பாற்று" என்று அலறினார். உடனே ஒரு இருள் கவிந்ததுபோல் எல்லோருடைய கண்களும் மயங்க, பிறகு பார்க்கையில் கொத்தவாலையாவது, ஸேவகர்களையாவது சிப்பாய்களையாவது காணவில்லை. முன்பு பயத்தால் திகைத்தபடி இப்பொழுது ஆச்சர்யத்தால் திகைத்து நின்றார்கள். ஸ்ரீஸ்வாமிகளுக்கு உடனே இது பகவானுடைய மாயை யென்ற ஞாபகம் வந்தது. "ஓ ஹோ! தலை தெரியாமல் கர்வங்கொண்டு பகவானுடைய கிருபை நமக்கே விசேஷமாய்க் கிடைத்ததென்று இறுமாந்து பகவன் மாயை என்னை என்ன செய்யமுடியுமென்று ராமனிடத்தில் வீர்யம் பேசினேனே. அவர் தன் மாயாபலத்தை இவ்விதமாய்க் காட்டினாரா? நான் எம்மாத்ரம்! மஹா அபராதஞ் செய்தேனே" யென்று கன்னத்தில் அடித்துக்கொண்டு பல தடவை நமஸ்காரம் செய்து தான் செய்த அபராதத்தை க்ஷமிக்கும்படி பல கீர்த்தனங்களால் வேண்டிக் கொண்டார்.

நைவேத்யம் :—'ஆரகிம்பவே,' 'கொலுவமரேகதா', 'விடமு சேயவே' யென்ற கீர்த்தனங்களில் இதைப்பற்றி விசேஷமாயிருப்பதைத் பார்க்க.

ப்ரபல ஜேசி :—'தாசரதே' யென்ற கீர்த்தனத்தில் 'ஆசை தீர' என்ற அனுபல்லவியைப் பார்க்க.

இந்த ராகத்தில் செய்த கீர்த்தனங்களில் இது ச்ரேஷ்டமானது. பாவத்தாலும் ஸங்கதிகளின் அழகான அமைப்பலும் ஸ்வரலயப்ரஸ்தாரத்தாலும் மேலானது.

ஸம எடுப்பு.

பல்லவி.

1 கா கா ரீ ரீ ஸ ரி க ரி ஸா ஸா || ஸா ரீ ஸா தா ஸா ,, ,, ஸா ரீ
ப வ ஞு த நா ஹரு த || ய மு ன ர மிம் பு மு
2 கா கா ரீ ரீ ஸ ரி க ரி ஸா ஸா || ஸா ரி க ரி ஸ தா ஸா ,, ,, ஸா ரீ
ப வ ஞு த நா ஹரு த || ய மு ன ர மிம் பு மு
3 கா கா ரீ ரீ ஸ ரி க ரி ஸா ஸா || ஸா ரி க ரி ஸ தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
4 கா கா ரீ ரீ ஸ ரி க ப க ரி ஸ ஸ || ஸா ரீ ஸா தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
5 கா கா ,, க ரீ ஸ ரி க ப க ரி ஸ ஸ || ஸா ரீ ஸா தா ஸா ,, ,, ப த ஸா
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
6 கா த பா க ரீ ஸ ரி க ப க ரி ஸ ஸ || ஸா ரீ ஸா தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
7 கா த பா க ரீ ரீ ப க ரீ ஸா || ஸா க ரி ,, ஸ தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
8 கா த ப த ப க ரி ரீ ப க ,, க ரி ஸ || ஸ ரி ஸரிகரி ரி ஸ தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
9 கா பதஸ்த ப க ரீ ஸ ரி க ப க ரி ஸ ஸ || ஸ ரி ஸரிகரி ரி ஸ தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
10 க ப த ஸ த ப க ரி ஸ ரி க ப க ரி ஸ ஸ || ஸ ரி ரி க ரி ஸ தா ஸா ,, ,, ப த ஸ ரி
ப வ ஞு த நா ஹ்ரு த || ய மு ன ர மிம் பு மு
11 கா கா பா பா க ப தா ப தப பா || கா ,, ரி ஸரிகரிஸரிகரி ரீ ஸ ரி ,, ஸ ரீ
ப ட வி க ஓ || ர

10-வது ஸங்கதியைப்பாடி 11, 12 ஸங்கதியை திருப்பிப் பாடவும்.

21 கா கா பா பா க ப த ஸ த த ப ப || கா ,, ரீ ஸரிகரிஸரிகரி ரீ ஸ ரி ,, ஸ ரீ
ப ட வி க ஓ || ர
[illegible] த த ப க த ப ப || க ரீ த பா ரீ ஸா த த ப க ரி ஸ ரி
[illegible] ஓ || ர
[illegible] ,, ,, த த ப ப || கா ,, ரீ ஸரிகரிஸரிகரி ரீ ஸ ரி ,, ஸ ரீ
|| ர

அனுபல்லவி.

		ப க ரி	ப க ரி ஸ	ரி க ரி க	பா கா	பா ,, ,,	பா ,, ,
		க	நா	தோ	வ		
		ப த ப க	ப க ரி ஸ	ரி க ரி க	பா கா	பா ,, ,,	பா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
3 தா தா	ப த ஸ த ப	க ப த ப க	ப க ரி ஸ	ரி க ரி க	ப க ப த	ஸா தா	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
4 தா தா	ப த ஸா	,, த ப க	ப க ரி ஸ	ரி க ரி க	ப க ப த	ஸா தா	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
5 தா தா	ப த ரி ஸா	த ப க	ப க ரி ஸ	ரி க ரி க	ப க ப த	ஸா தா	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
6 ரி ஸ ஸ த	ஸ த த ப	ப க த ப	க ரி ஸ	ரி க ரி க	ப க ப த	ஸா தா	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
7 ரி ஸ ஸ த	த ப ப த	ஸ த ப க	ப க ரி ஸ	த ஸ ரி க	ப க ப த	ஸா தா	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
8 க ரி ஸ ரி	ஸ த ஸ த	ப த கா	ப க ரி ஸ	ஸ ரி க ரி	க ப க ப	த ஸ ப த	ஸா ,, ,,
ப வ	தா	ர க	நா	தோ	வ		
[illegible] ப க ரி	ஸ ரி க ரி ஸ	த ஸ ரி ஸ த	ப க ரி ஸ	ரி க ரி க	ப த ப த	ஸ த ரி ஸ	ரீ ரீ
ப வ	தா	ர க	நா	தோ	வ கு		ல்கி ன
10 கா [illegible] கா	ரீ ஸா	ஸ ஸ த ப	த ரி ஸ ஸ	ஸ த ப த	ரி ஸ த ப	ஸ த ப க	க ரி ஸ ரி
ப	வி க	தீ	ர	க	க ம	ல	ஸ ம்

சரணம்.

1 பா பா	பா பா	த ப ப த	ப க ரீ	த த பா	ப க த ப	த க த த	ப ப க ரி
ப வ	ன ஸா	த்	ப்ரி ய	த நு	கை	தி ரி	கி ன
[illegible] த க ப [illegible]	க க ரி ரி	ஸ த ஸ ரி	க ப த ஸ	தா ,, ,,	,, ,, ,, ,,	பா ,, ,,	,, ,, ,, ,,
ப	ல் க	தீ		ர			
3 ப க [illegible]	ஸ த ஸா	ரீ க ரீ	,, க ஸ ரீ	க ப கா	ரீ ஸ ரீ	க ரி ஸ ரி	த ஸ ப் த
ப வ	ன மு	ஜே ரி	ந னு	வெ ர	பி ஞ் ஜி		ன
4 ஸ க க [illegible]	ஸ ஸ ரி ரி	ஸ த ஸ த	ப க ரி ஸ	ஸ ரி க ப	க ப த ஸ	ரி ஸ ஸ த	த ப க ரி
ப	வி க	தீ	ர	க	ம	ல வ	ம்